விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
பக்கங்கள்: இருபது
Valampurii
சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 25 வியாழக்கிழமை (11.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 297

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# முன்னேஸ்வரம் சிவன் கோயிலுக்கு
# ராஜகோபுரம் அமைக்க பிக்குகள் தடை!

ஈழத்து சிவாலயங்களில் மிகமுக்கியமான, பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான சிலாபம் முன்னேஸ்வரம் சிவன் கோவில் பிரதேசம் பௌத்தர்களின் புனித பிரதேசம் என பௌத்த பிக்குகள் கருத்து வெளியிட்டுள்ளனர். அதுமட்டுமல்லாது அவ் ஆலயத்தில் முன்னெடுக்கப்படும் இராஜகோபுர திருப்பணி முயற்சியையும் அவர்கள் தடுத்து வருகின்றனர். இதனால் அங்கு வாழும் இந்துக்கள் பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளனர்.



இது குறித்து அக்கோயிலின் தர்மகர்த் தாவும் தலைமைப் பூசாரியுமான பத்பநாப குருக்கள் கூறுகையில்,

சிலாபம் முன்னேஸ்வரத்திலுள்ள சிவன் கோயிலுக்கு ராஜகோபுரம் அமைக்க தாம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஜாதிக ஹெல உறுமய பிக்குகள் கட்சி தடையாக இருக்கின்றது.

ராஜகோபுரம் அமைப்பதற்காக அனுமதி கேட்டு மாதம்பை (20ஆம் பக்கம் பார்க்க)

## வாக்கெடுப்பின்றி சட்டமூலம் நிறைவேறியது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தம் தொடர்பான சட்ட மூலம் நேற்று பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி அதிகார விசேட ஒழுங்குகள் சட்டம் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச்சட்டம் ஆகிய உத்தேச பிரேரணைகள் நேற்று பாராளு (20ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத ஆஸி பயணம்; 31 பேர் கைது

அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமான முறையில் செல்வதற்காக முயற்சித்த 31பேரை வவுனியாவில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இவர்கள் பயணித்த பஸ்ஸை சோதனையிட்டபோதே அவுஸ்திரேலியா செல்ல (20ஆம் பக்கம் பார்க்க)

## மஞ்சுள திலகரட்ணவை தாக்கிய சந்தேகநபரின் மாதிரிப் படம்!



நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபரின் மாதிரி உருவப் படத்தை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் வெளியிட்டுள்ளனர். குறித்த மாதிரி உருவத்தைக் கொண்ட சந்தேகநபர் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு, பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்-077 755 950, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தலைவர்-0717 774 400, 0112 662 323, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அத்தியட்சகர்-0777 661 137, 0112 662 322, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அலுவலக அதிகாரி-0714 060 906, 0112 662 311.

நீதிசேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் விசாரணைகள் தீவிரமாக இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-11)

## மஞ்சுள மீதான தாக்குதலுக்கு சர்வதேச நீதித்துறை கண்டனம்

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண ஆயுததாரிகளால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உறுதியான நடவடிக்கைகளை எடுத்து இலங்கை அரசு நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று சர்வதேச நீதித்துறை வல்லுநர்கள் அமைப்பு கூறியுள்ளது.

மஞ்சுளா திலகரட்ண மீதான தாக்குதல் நீதித்துறையின் சுதந்திரத்தை குறைக்கும் நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகும் என்று சர்வதேச நீதித்துறை வல்லுநர்கள் அமைப் பின் ஆசிய இயக்குநர் சாம் ஜாப்ரி தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள நீதிபதிகள் பாதுகாப்பாகவும், அச்சுறுத்தலுக்கு ஆளாகாமலும் பணியாற்றக்கூடிய ஒரு சூழலை அரசு உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதத் தொடக்கத்தில் இலங்கை தலைமை நீதிபதி மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவைச் சேர்ந்த இரு உறுப்பினர்களையும் சந்திக்க வேண்டும் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறையின் சுதந்திரத்துக்கு ஏற்படக் கூடிய தாக்கங்களைக் கருத்தில் கொண்டே அத்தகைய (20ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைப் போராட்டம் இன்றுடன் நிறைவடையும்!

### உயர் கல்வி அமைச்சர் எதிர்பார்ப்பு

கடந்த 3 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து வரும் பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் இன்றைய தினம் நிறைவடையும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

3 மாதங்களாக நீடித்து வந்த பல்கலைக் கழக பேராசிரியர்களின் தொழிற்சங்க போராட்டம் பெரும்பாலும் இன்று நிறைவடையும் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப் பட்ட இணக்கப்பாடு தொடர்பில், இன்றைய தினம் அறிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பொன் றின் மூலம் தீர்மானங்கள் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் எஸ்.பி திஸாநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், நேற்று நள்ளிரவு வரை பல்கலைக் கழக பேராசிரியர்களின் தொழிற்சங்க போராட்டம் இன்றுடன் நிறைவடையும் என பேராசிரியர்கள் சார்பில் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தகது. (ந-11)

## இந்தியத் தரப்பால் அழுத்தம் இருக்காது!

### தெரிவுக்குழு குறித்து மாவை



நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து கொள்வது தொடர்பில் இந்திய தரப்பில் இருந்து தமக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட மாட்டாது என்று தாம் நம்புவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராஜா தெரிவித்தார்.

தேசிய பிரச்சினை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக இந்திய தரப்புடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் நோக்கில் 4 நாட்கள் இந்திய விஜயத்தை மேற் கொண்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்களை கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தன் தலைமையிலான எழுவர் கொண்ட குழுவினர் சந்திக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந-1)

## இரும்பின் மோகத்தால் விற்கப்பட்டது வெடிகுண்டு!

### 640 ரூபாயுக்கு கிளைமோர் விற்பனை

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் வசிக்கும் பெண் ஒருவர் இரும்புச் சேகரிப்பதற்காக அங்கிருக்கும் மீள்குடியேற்றப்படாத பகுதியிலிருந்து 16 கிலோ நிறையுடைய கிளைமோர் குண்டினை இரும்பு என நினைத்து எடுத்து வந்துள்ளார்.

எடுத்து வந்த அக்குண்டினை தென்பகுதியைச் சேர்ந்த இரும்பு வியாபாரியிடம் கிலோ நாற்பதுபடி 640 ரூபாய்க்கு விற்றுள்ளார். இதனை குண்டு என அறியாமல் தென்பகுதியைச் சேர்ந்த வியாபாரியும் வாங்கியுள்ளார்.

பிறகு அனைத்து இரும்புகளையும் கொள்வனவு செய்து கொண்டு செல்லும்போது இந்த இரும்பு ஏதோ வித்தியாசமாக காணப்படுகின்றது என இனங்கண்டு அதனை அங்கேயே விட்டுச் சென்றுள்ளார்.

இந்த கிளைமோர் குண்டினை அவதானித்த (20ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் ஆலோசகராக முன்னாள் தளபதி



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கரையோர விவகாரங்களுக்கான ஆலோசகராக முன்னாள் கடற்படைத் தளபதி [illegible]

## கொடி பிடித்து சவப்பெட்டி எரித்தாலும் மகிந்த மசியார்!

### பேச்சுக்கு வர மேர்வின் அழைப்பு

கொடி பிடித்து பதாகை ஏந்தி, சவப்பெட்டியை தூக்கிச் சென்று எரிப்பதாலோ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயப்பட மாட்டார் எனவும் பிரச்சினை இருந்தால் அவருடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் மக்கள் தொடர்பு துறை அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் சட்டத்தரணிகள் போன்ற கல்வி கற்றவர்கள் ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக இருப்பதுடன், முறையாகச் செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணிகள் அண்மையில் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் குறித்து நேற்று ஜா-எல பிரதேசத்தில் வைத்து செய்தியாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட போதே இந்தவிடயத்தைத் குறிப்பிட்டார். (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## இராமநாதன் நுண்கலைக்கழகம்
## பல்கலைக்கழக அனுமதி - 2011/2012

## உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)
## நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்

மேற்படி நான்கு வருட பட்டப் படிப்புக்கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 11.11.2012 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

### அனுமதிக்கான பொது நிபந்தனைகள்

**அனுமதிக்கான தகைமைகள்**

சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2011 ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்ய விரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது சங்கீதம் - கர்நாடகம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதாரணதரச் சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

**தகுதிகாண் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை உள்ளடங்கிய தகுதி காண் பரீட்சைக்கு (|Aptitude Test) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளத்தில் இருந்து பிரதி செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா 150 ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைக் கணக்கு இல. 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் பாடசாலை அதிபர் அல்லது **சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும்** அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட வேண்டும்.

விண்ணப்பதாரிகள் சுய விலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 23x10 ச.மீ அளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/ நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 11.11.2012 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** — **10.10.2012**

(C-1270)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
### இராமநாதன் நுண்கலைக்கழகம்
### பல்கலைக்கழக அனுமதி - 2011/2012

**நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்**

**தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் (Aptitude Test)**

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :- (தமிழிலும் ஆங்கிலத்திலும்)
   முதல் எழுத்துக் குறிக்கும் பெயர் :-
   தேசிய அடையாள அட்டையிலக்கம் :-
   நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :-
   தொலைபேசி இலக்கம் :- மின்னஞ்சல் முகவரி :-
2. க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேறு 2011 :-
   சுட்டிலக்கம் : Z புள்ளி: பொதுச்சாதாரண பரீட்சைப்புள்ளி :

| பாடம் | தரம் | மொழி மூலம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

3. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :
   முகவரி (ஆங்கிலத்தில்) :-
4. விண்ணப்பிக்கும் பாட நெறி : இசை ☐ நடனம் ☐ சித்திரமும் வடிவமைப்பும் ☐
   (தெரிவிற்கு ✓ இடுக)

சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :
1. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ☐
2. உறுதிப்படுத்திய 2011 க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேற்றுச்சான்றிதழ் (Z புள்ளி/மாவட்டம் உள்ளடங்கலாக) ☐
3. பெயர் மாற்றம் செய்யின் அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ☐

என்னால் தரப்பட்ட மேற்படி விபரங்கள் யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

............................ ............................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி பதவி முத்திரை பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு தீர்வை வழங்க அரசு தயங்கவில்லை!
## ஜீ.எல். பீரிஸ் தெரிவிப்பு

தமிழர்களுக்கு அரசியல் தீர்வுத் திட்டத்தை வழங்க அரசாங்கம் தயங்க வில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ் சமூகத்திற்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை வழங்க அரசாங்கம் விரும்பவில்லை என்ற தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் குற்றச்சாட்டு பிழையானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் சமூகம் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கிலேயே பாராளுமன்றத் தெரிவுக்குழு தீர்வுத் திட்டம் முன் வைக் கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார். தமிழருக்கான தீர்வுத் திட்டத்தை காலம் தாழ்த்தும் நோக்கிலேயே அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழு யோசனையை முன் வைத்துள்ளதாக கூட்டமைப்பு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ந-11)

# பாரிய கருந்துளை விண்ணில் கண்டுபிடிப்பு

விண்ணில் உள்ள வாயு, தூசு, ஒளி தன் வசம் ஈர்க்கும் பாரிய கருந்துளையை விஞ்ஞானிகள் குழு கண்டு பிடித்துள்ளது.

பிரிட்டன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இந்திய விஞ்ஞானி மாந்தா பனாஜி தலைமையிலான குழுவினர் ULASG1234 class 0907 என்ற சக்தி வாய்ந்த கருந்துளையை கண்ட றிந்ததாக தெரிவிக்கப் படுகிறது.

இது குறித்து அவர் கருத்துக் கூறுகையில்,

விண்ணிலுள்ள கருந்துளைகள் அடர்த்தியான தூசியால் மூடப்பட்டு இருப்பதால் இதற்கு முன் இதனை கண்டறிவதில் சிரமம் இருந்தது என்றார். (ந-8)


**செல்லா சினிமா- யாழ்ப்பாணம்**




10.30, 2.30, 6.30, 9.30 D.T.S

**பணியாளர்கள் தேவை**

வடிவமைப்பாளர்கள்
ஆண்/பெண்
(Graphic Designer) தேவை.
தொடர்புகளுக்கு:-
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்,
62/17, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 1358 (C-1273)

**உடன் விற்பனைக்குண்டு**

1. மோட்டார் சைக்கிள்
   1. NPWH-XXXX - PLEASURE - 100cc
2. கன்ரர்
   1. 41 SRI-XXXX - ISUZU
3. உழவு இயந்திரம்
   1. NPRA - XXXX Massey Ferguson
   2. NPHF - XXXX Massey Ferguson
   3. 49 - XXXX Massey Ferguson
   4. 49 - XXXX Mahindra
4. முச்சக்கர வண்டி GF - XXXX

தேவைப்படுவோர் திங்கள் - வெள்ளி காலை 9 - 4.30 வரையான நேரத்தில் கீழ்வரும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.
No. 74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1898, 021 222 1900, 075 7182184 (C-1272)


**கண்ணீர் அஞ்சலி**

மண்ணுலகில் 28 . 06 . 1931



விண்ணுலகில் 09 . 10 . 2012

அம்பகாமம் மாங்குளத்தை பிறப்பிடமாகவும் பட்டிக்குடியிருப்பு நெடுங்கேணியை வசிப்பிடமாகவும்கொண்ட

**அமரர் மாரிமுத்து இராசலட்சுமி**

எமது துணுக்காய் கல்வி வலயத்தின் ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப. பங்கயற்செல்வன் அவர்களின் அன்பு மாமியார் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைவதோடு அன்னாரது குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துணுக்காய் கல்விவலயம், மாங்குளம். (C-1275) வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக்கல்வி ஊழியர் நலன்புரிச் சங்கமும்

# இன்று ஒரு தகவல்

## சமாளிப்பு

"சமாளிப்பு" என்பது ஒரு தனி சமார்த்தியம்.

இது எல்லோருக்கும் சுலபமாக வந்துவிடாது. சிலருக்கு கைவந்த கலையாக இருக்கும். முக்கியமாக கலைஞர்களுக்கு இந்த சாமர்த்தியம் மிகவும் அவசியம்.

இந்தக் காலத்திலே வானொலி நாடகங்களை முன்னரே ஒலிப்பதிவு செய்து – இசையெல்லாம் இணைத்து அழகு செய்து "டேப்" பிலே தயாரித்து ... தேவையான நேரத்திலே ஒலிபரப்பு செய்கிறார்.

முன்பெல்லாம் இந்த வசதி வாய்ப்பு கிடையாது. நேரடியாகவே மேடையில் வசனம் பேசி நடிக்க வேண்டும் ... தேவையேற்படும் போது ஒருவர் மேடையில் இருந்து இசை, சத்தம் இவற்றையெல்லாம் தனித்தனியாக ஒலிபரப்பிக் கொண்டிருப்பார்.

கதாநாயகன் கோப்பி ஆத்துகிறார் என்று உண்மையாகவே ஒருவர் தனியாகவே ஒரு மைக் முன்னால் நின்று கோப்பியையோ தண்ணீரையோ ஆத்தி அந்த சத்தத்தை ஏற்படுத்தியிருப்பார். இப்போது அந்த சத்தத்தை தனியாக பதிவு செய்து வசனத்தோடு இணைத்துவிடலாம்.

பிழையாக ஒலிபரப்பு செய்தால் அதைத் திருத்துவதற்கு வழியேயில்லை. காற்றிலே போனது போனதுதானே. அது மாதிரி சமயத்திலே "சமாளிப்பு" மிகவும் அவசியம்.

அரைமணித்தியால நாடகம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. அந்நாடகம் நேரடியாக ஒலிபரப்பு ஆகிக் கொண்டிருக்கிறது.

அந்நாடகத்தில் குழந்தை வீறிட்டு அழவேண்டும். உடனே கணவன் மனைவியைப் பார்த்து பொறுப்பில்லாமல் குடும்பம் நடத்துவதாக பேச வேண்டும். இதுதான் நடிக்க வேண்டும்.

ஒரு இசைத்தட்டிலே effects எல்லாம் பதிவு செய்து இருக்கும். அதிலே குழந்தை அழுகிற சத்தம், நாய் குரைக்கும் சத்தம், பூனை "மியாவ் மியாவ்" என்று கத்தும் சத்தம்... இப்படியாக நிறைய ஒலிகள். அதிலே குழந்தை அழுகிற சத்தத்தை தருவர். அந்த நேரத்திலே ஒலிக்கவிடவேண்டும்.

அந்த இசைத்தட்டிலே அது இரண்டாவதாக இருக்கின்றது. ஆனால், அந்த நபர் தவறுதலாக மூன்றாவது இடத்தில் பதிவாகி இருந்ததைப் ஒலிபரப்பி விட்டார். என்ன நடந்திருக்கும்?.... குழந்தை அழுவதற்குப் பதிலாக நாய் குரைக்க ஆரம்பித்து விட்டது. அனைவரும் பதறிப்போய்விட்டார்கள். என்ன செய்வது என்று புரியவில்லை.

"வாழுகின்ற வீட்டிலே இப்படி நாயை வளர்க்க வேண்டாம் என்று எத்தனை தடவை நான் சொல்கிறது? குழந்தை அழுகிற சத்தத்தைக் கூட நாய் சத்தம் அடக்கிவிட்டது" என்றார்.

ஒலிபரப்பு அறைக்குள்ளே நடந்த ஒரு தவறு வெளி உலகத்துக்கு தெரியாமலே போய்விட்டது... இதற்குக் காரணம் அந்தக் கலைஞரின் புத்திசாலித்தனமான சமாளிப்பு.

இதே மாதிரித்தான் 1959 ஆம் ஆண்டில் ஒரு வரலாற்று நாடகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

"இளவரசர் போரிலே வெற்றி பெற்று வந்து கொண்டிருக்கிறார்" என்று சொல்ல வேண்டியவர் மைக் முன்பு வந்தார்.

அவர் "அரசே! இளவரசர் தோற்றுப் போய் வந்து கொண்டிருக்கிறார்" என்று பிழையாக மைக் முன்னால் வந்து சொல்லிவிட்டார்.

நாடகத் தயாரிப்பாளர் இதைக் கேட்டவுடன் எழுந்து "மைக்" முன்னால் ஓடி வந்து நின்று கொண்டு "இளவரசர் தோற்கவில்லை; வெற்றி வாகை சூடி விரைந்து வந்து கொண்டிருக்கிறார். இப்போது அறிவித்தவன் எதிரியன் ஒற்றன்; பொய் கூறிவிட்டு ஓடப்பார்க்கிறான்; இவனுக்கு சரியான தண்டனை வழங்கப்பட வேண்டும்" என்று சொல்லிவிட்டு அடிக்க ஆரம்பித்து விட்டார். அதனாலே நாடகம் அடிபட்டுப் போகாமல் ஒலிபரப்பாகிவிட்டது.

இது மாதிரியான சாமர்த்தியமான சமாளிப்புகள் பெரிய தவறுகளை எல்லாம் வெளியே தெரியாமல் காப்பாற்றுவதற்கு உதவியாக இருந்திருக்கிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# திவிநெகும சட்ட மூலத்தினால் வடக்கு மக்களின் ஜனநாயக உரிமை பறிபோகும் ஆபத்து

## ஜயலத் எம்.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திவிநெகும சட்டமூலத்தினால் வடக்கு மக்களின் ஜனநாயக உரிமைகளை அப்படியே விழுங்கிடும் ஆபத்து தற்போது ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளரார். அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, இந்த சட்டமூலம் குறித்து உயர்நீதி மன்றத்தில் அறிவிக்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க 13வது திருத்தத்தின்படி அனைத்து மாகாண சபைகளிலும் சட்டமூலத்திற்கு அனுமதி பெறப்பட வேண்டும். அதன்படி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள 7 சபைகளிலும் குறித்த சட்டமூலத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனினும் தற்போது அரசினால் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் இதுவரை நடத்தப்படவில்லை. இதனால் வடக்கு மாகாண சபையில் மக்களின் பிரதிநிதித்துவம் வெளிப்படுத்தப்பட முடியாதுள்ளதோடு இந்த சட்டமூலம் குறித்து வடக்கு மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் இணக்கமும் பெறப்பட முடியாதுள்ளது.

அண்மையில் ஜனாதிபதி மூலம் முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் வடக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவரது விருப்பம் மாத்திரமே இந்த சட்டமூலத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ளது. உண்மையில் குறித்த வடமாகாண ஆளுநர் வடக்கு மக்களின் பிரதிநிதி அல்ல. அங்குள்ள மக்களினால் வாக்களித்து தெரிவானவரும்அல்லர். இவர்ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டவர் மாத்திரமே ஆவார்.

நாட்டின் ஏனைய மாகாண சபைகளில் மக்களின் வாக்குகள் மூலம் சட்டமூலத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்க அங்கீகாரம் பெறப்பட்டது. எனினும் வடக்கு மாகாணத்தில் அவ்வாறு இடம்பெறவில்லை. இதன் காரணமாக வடக்கு மாகாண மக்களின் விருப்பு, வெறுப்பு, அங்கீகாரம், ஜனநாயக உரிமைகள் என்பன அரசாங்கத்தினால் மூடி மறைக்கப்பட்டுள்ளன. இதனை ஒருபோதும் ஏற்க முடியாது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் திவிநெகும சட்ட மூலத்திற்கு வடமாகாண மக்களின் அங்கீகாரம் உள்ளது என்பதனை ஜனநாயக ரீதியில் ஏற்றுக் கொள்ளமுடியாது. இதே வேளை வடக்கு மாகாண சபைத்தேர்தலை அரசாங்கம் காலதாமதப்படுத்துவதன் மூலம் அம்மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதையே சுட்டிக்காட்டுகிறது.

ஜனாதிபதியால் மட்டும் நியமிக்கப்பட்ட ஆளுநரின் விருப்பம் பெற்று வட மக்களின் உரிமைகளை அரசாங்கம் பறித்தெடுத்துள்ளது. இது ஜனநாயகத்திற்கெதிரான துரோகம். ஏனைய மாகாணங்களில் மக்களுக்கு வழங்கப்படும் அனைத்து உரிமைகளும் வடக்கு மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என அதில் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# கொரெக்ஸ்-டி இருமல் பாணிக்கு தடை விதிப்பு

கொழும்பு சுகாதார அமைச்சினால் corex - d, corex இருமல் பாணி பாவிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே இதனை மருந்தகங்களில் விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்துமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். மேலும் இவ்வறிவித்தலை மீறி விற்பனை செய்பவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொதுமக்கள் இதனை வாங்குவதையோ வாங்கி உபயோகிப்பதையோ உடனடியாக நிறுத்தி உயிராபத்து ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 50 | 70 |
| தக்காளி | 50 | 30 | 25-30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 30 | 40 |
| கோவா | 90 | 70 | 50 | 80 |
| கரட் | 100 | 80 | 80 | 120 |
| பூசணி | 60 | 40 | 30 | 40 |
| புடோல் | 50 | 40 | -- | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 60-70 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 60 | 45-50 | 60 |
| பாகற்காய் | 120 | 80 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | 50 | 60 |
| பயற்றங்காய் | 40 | 40 | 30 | 50 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 70 | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 80 | 80 | 110 |
| முருங்கைக்காய் | 60 | 40 | 40 | 40 |
| போஞ்சி | 90 | 90 | 70 | 130 |
| கத்தரிதம்புள்ள | 70 | 80 | -- | 50 |
| கீரை – 1 பிடி | 15 | 30 | 10-20 | 20 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30 | 20-35 | 28-30 |

# இராசி பலன்

*11.10.2012*
*(புரட்டாதி 25, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*ஏகாதசி முன்னிரவு 11.31 மணிவரை*
*ஆயிலியம் முற்பகல் 11.53 மணிவரை*
*இராகுகாலம் 1.32-3.02 மணிவரை*
*சுபநேரம் 7.32-9.02 மணிவரை*
*ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்*

**மேடம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொழிலை விருத்தி செய்ய எடுத்த முயற்சி வெற்றி தரும், பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்துசேரலாம், விருந்தினர் வருகையுண்டு, பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், புதியவர்களின் அறிமுகம் கிடைக்கலாம்.

**கடகம்** உங்களின் புதிய யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் வந்து சேரும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிங்கம்** குடும்பப் பொறுப்புக்கள் கூடும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**கன்னி** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம், ரோக நிலையுண்டு, மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவிசெய்ய முன்வரலாம், தொழில் முன்னேற்றகரமாக அமையும், பணப்புழக்கம் அதிகரிக்கும், கலகலப்பான நாள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், மதிப்பும் மரியாதையும் உயரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள்.

**மகரம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் இழுத்தடிக்கப்படாமல் இழுத்தடிப்பு நீக்கப்படலாம்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், இல்லத்தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உடல்நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் உண்டு, சுவாரஸ்யமான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளநல தினத்தை முன்னிட்டு நேற்று அஞ்சலோட்டம்




(யாழ்ப்பாணம்)

உலக உளநல நாளை முன்னிட்டு நேர் சிந்தனை தரும் நிறைவான வாழ்வு என்ற தொனிப்பொருளில் வலயப் பாடசாலைகளை இணைக்கும் அஞ்சல் ஓட்டம் நேற்று இடம் பெற்றது. இவ் அஞ்சல் ஓட்டம் யாழ்.வலயக்கல்வி பணிமனை முன்பாக காலை 8 மணி யளவில் ஆரம்பமாகி 9.45 மணியளவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியினை வந்தடைந்தது.

இதில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்வி உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இவ் ஊர்வலத்தின் பின்னர் மாணவர்களின் கலையாக்கங்கள் நிறைந்த கண்காட்சியொன்றும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

பின்னர் மறைக்காமல் எனும் குறும்படம் காட்சிப்படுத்தப்பட்டதோடு விடியலைத்தேடி எனும் நாடகமும் யா/ஒஸ்மானியா கல்லூரி மாணவர்களின் முஸ்லிம் கலாசார நிகழ்ச்சியும் யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியின் சவால்களை வெற்றி கொள்வோம் என்ற பேச்சும் யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மாணவர்களின் நாடகமும் இடம்பெற்ற தோடு இறுதியில் பரிசில் வழங்கலும் இடம்பெற்றது. (அ-4)




நன்றி: மிரர்

# உடைக்கப்பட்ட காந்தி சிலை மீண்டும் புதுப்பொலிவுடன்

## 15 ஆம் திகதி திறப்புவிழா

அரியாலையில் உடைக்கப்பட்ட காந்தி சிலை மீண்டும் திறந்து வைக்கப்படவுள்ள தாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ குகனேசன் தெரிவித்தார்.

கடந்த பல மாதங்களுக்கு முன்னர் அரியாலை காந்தி சனசமூக நிலையத்திற்கு முன்னால் நிர்மாணிக்கப்பட்டிருந்த காந்தி சிலையொன்று இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது.

இக்காணி சிலை உடைப்பிற்கு பல தரப்பினர் எதிர்ப்பினை தெரிவித்திருந்ததோடு இது தொடர்பில்யாழ்.நீதிமன்றிலும்வழக்குநடைபெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் குறித்த காந்தி சிலையானது தற்போது கொழும்பில் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் உடைக்கப்பட்ட அதேயிடத்தில் நிர்மாணி க்கப்படவுள்ளதாகவும் அத்தியட்சகர் தெரிவித்தார்.

பழைய சிலையினை அகற்றி கண்ணாடி பெட்டி அமைக்கப்பட்டு அதற்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்படவுள்ளது. இக் காந்தி சிலை திறப்பு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதாகவும் இந் நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத்தூவர் வி.மகாலிங்கம் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-4)

# இடைநிலை வைத்தியர்களுக்கு விடுதி வசதி வழங்கப்படவில்லை

## போக்குவரத்திற்காக அன்புலன்ஸ் சேவையை வழங்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இடைநிலை வைத்தியர்களிற்கு விடுதி வசதி வழங்கப்படாததனால் அவர்களின் போக்குவரத்திற்கு அம்புலன்ஸ் சேவையை வழங்குமாறு அரச வைத்தியர் சங்கத்தின் யாழ். கிளை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், தற்போது யாழ். போதனா வைத்திய சாலையில் விடுதி பங்கீட்டடிப்படையில் இடைநிலை வைத்தியர்களுக்கு இடம் வழங்கப் படவில்லை

இதனால் அவர்கள் இரவுக் கடமை நேரங்களில் வீடுகளில் தங்கியிருந்தே வைத்தியசாலைக்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்திற்குதெரியப்படுத்தப்பட்டபோதும்அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் இரவு நேரங்களில் அவசர நிலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களே பாதிப்படையவுள்ளனர்.

இதற்கு நாங்கள் பொறுப்பல்ல. வைத்தியசாலை நிர்வாகமே பொறுப்பு கூறவேண்டும். இடைநிலை வைத்தியர்களிற்கு விடுதி வழங்கப்படாவிடின் அவர்களிற்கு அம்புலன்ஸ் சேவையை வழங்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் இது தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளரிடம் தாய் சங்கத்தினருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளோம் என அவர் தெரிவித்தார். (அ-4)

# மாணவர் கௌரவிப்பு

(சாவகச்சேரி)

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையினரால் ஹப்பன் கணக்கில் இணைந்து 2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தரம் 5 மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் வடக்கு வலய முகாமையாளர் இ.அருளானந்தம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி சியாமளா கந்தசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-29)

# ஐ.நா.சிறுவர் பாதுகாப்பு நிதியம் பாடசாலைகளுக்கு நிதியுதவி

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கான உளசமூக இடையீட்டு ஆதரவு மற்றும் வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு 10 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படுவதாக வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்தின் கீழ் சகபாடி ஆதரவு குழுக்களுடன் கலந்துரையாடல், உணர்வுகளை கையாள்வதற்கான திறன்விருத்திப் பயிற்சி, நேர்மனப்பாங்கான நடத்தைகளுக்கான முகாமைப் பயிற்சி, காலை ஒன்றுகூடலில் உளநலம் தொடர்பான ஒரு சிந்தனை மற்றும் யோகா அல்லது அக அமைதி செயற்பாடுகளை வழங்குதல், மாணவர், பெற்றோர் மற்றும் சமூகத்திற்கான விழிப்புணர்வு தொடர்பான ஒரு கலை நிகழ்வு, கண்காட்சி மற்றும் சஞ்சிகை ஆக்கம் (கருத்தும் காட்சியும் சித்திரம், சுவரொட்டி, சிறுகதை, கவிதை) ஆகிய விடயங்கள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

மேற்காட்டிய செயற்பாடுகள் யாவும் கடந்த மாதம் நடுப்பகுதியில் இருந்து இம்மாதம் 2 ஆம் வாரத்துடன் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

கோட்ட மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்படி நிகழ்வுகள் தொடர்பான ஒலி, ஒளிப்படச் சான்றிதழ் மாகாணக் கல்வி திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் வலயக்கல்வி திணைக்களத்திற்கும் பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபங்களை பார்வையிடுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

# சரசாலை நூலகத்தில் படக்காட்சிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினரால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு படக்காட்சிகள் காண்பிக்கப்படவுள்ளன.

இன்று வியாழக்கிழமை பட்டிமன்றப் படக்காட்சியும் எதிர்வரும் 14 ஆம் திகதி சிறுவர்களுக்கான சிறுவர் படக்காட்சியும் நூலக மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளதெனவும் அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு நூல்கர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (அ-3-29)




# டெங்கு விழிப்புணர்வு செயற்பாட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் டெங்கு விழிப்புணர்வு செயற்பாட்டு நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு பொதுமக்களின் ஒத்துழைப்புடன் நடைபெறவுள்ளது.


இதன் ஆரம்ப நிகழ்வு கடற்கரை வீதியிலுள்ள குருநகர் பிரதேச வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இச்செயற்பாட்டு நிகழ்வுகள் கடந்த வாரம் அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெற்ற டெங்கு வாரம் சம்பந்தமான கலந்துரையாடலின் பிரகாரம் இடம்பெறவுள்ளதாக யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ.ஞானஜோதி அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் மூழ்கிய போர்க் கப்பல்களால் கடற்றொழில் மேற்கொள்வதில் சிரமம்

## குடாநாட்டு மீனவர்கள் கவலை



(யாழ்ப்பாணம்)

யுத்த காலத்தில் கடலினுள் மூழ்கிய போர்க் கலங்களால் தொழில் நடவடிக்கையினை மேற்கொள்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக குடாநாட்டு மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளதோடு அவற்றினை அகற்றி தொழில் நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ள உதவி புரியுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குடாநாட்டில் குறிப்பாக வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி, தாளையடி மற்றும் நாகர்கோவில் கிழக்கு போன்ற பகுதிகளில் உள்ள மீனவர்கள் கடலினுள் மூழ்கிய போர் கலங்களினால் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த மீனவர்களினால் பருத்தித்துறை பிரதேச சபையிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளரினாலும் இந்த விடயம் தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் மற்றும் கடற்படையினரின் கடற்கலங்கள் இக்கடற்பரப்பில் மூழ்கி சிதைவடைந்துள்ளதால் குறித்த பகுதியில் தொழில் நடவடிக்கையை மேற்கொள்ளும் கடற்றொழிலாளர்களின் வலைகள் மற்றும் வள்ளங்கள் நாள்தோறும் சேதமடைந்து வருகின்றன.

பெரும்பாலும் குறித்த பகுதியில் வாழும் மீனவர்கள் கரைவலைத் தொழில் நடவடிக்கையினை நம்பியே தொழில் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதால் கடலில் உள்ள சிதைவடைந்து காணப்படும் பொருட்களால் கடற்றொழிலாளர்கள் நாளாந்தம் பெரும் நட்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

எனவே மீனவர்களின் நலன் கருதி உரிய காலத்திற்குள் கடலினுள் மூழ்கியுள்ள போர்க் கலங்களை அகற்றித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை குறித்த கடற்பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களினால் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்திற்கும் நகர சபை பிரதேச சபைகளுக்கும் மகஜர் கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ-6)


YARL Taxi

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்

021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்.

E-Mail - Yarltaxi@gmail.com


## ஓடும் ரயிலில் மோதுண்டு ஒருவர் தற்கொலை

(சிலாபம்)

சிலாபத்தில் ஓடும் ரயிலில் மோதுண்டு ஒருவர் நேற்று முன்தினம் தற்கொலை செய்து கொண்டுள்ளார். சிலாபம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சவரான மற்றும் பலாபன ரயில் நிலையங்களுக்கு இடையில் மைக்குளம் பிரதேசத்தில் இந்த தற்கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கி பயணித்த அலுவலக ரயிலில் மோதுண்டடே குறித்த நபர் உயிரிழந்துள்ளார். தற்கொலை செய்து கொண்ட 41 வயதுடைய நபரின் சடலம் சிலாபம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## மெழுகுவர்த்தி மீள்சுழற்சி இயந்திரம் கண்டுபிடிப்பு

### சம்மாந்துறை தமிழ் மாணவன் சாதனை

(திருகோணமலை)

இலங்கையில் இவ்வாண்டுக்கான இளம் கண்டுபிடிப்பாளர்கள் பத்துப் பேரில் ஒரேயொரு தமிழ் மாணவனான சம்மாந்துறை கோரக்கர் கிராமத்தை சேர்ந்த மாணவன் வினோஜ்குமார் கிழக்கில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இலங்கை பொறியியல் நிறுவனம் வருடாந்தம் நடத்திவரும் இளம் கண்டுபிடிப்பாளர் போட்டியில் இவ்வாண்டுக்கான தேசிய நிலைப் போட்டியில் தெரிவாகிய இளம் கண்டுபிடிப்பாளர்கள் பத்துப்பேரில் ஒரேயொரு மாணவன் தெரிவாகி சாதனை படைத்துள்ளான்.

கிழக்கின் சம்மாந்துறை கோரக்கர் தமிழ்க் கிராமத்தை சேர்ந்த சோமசுந்தரம் வினோஜ்குமார் என்பவரே இச்சாதனைக்கு சொந்தக்காரன்.

கிழக்கில் முதலிடம் பெற்ற சோமசுந்தரம் வினோஜ்குமார் சம்மாந்துறை வலயத்திலுள்ள ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் 10ஆம் தரம் பயிலும் மாணவன் ஆவார்.

இவர் தேசிய நிலைப் போட்டியிலும் தெரிவாகியுள்ளார். அதன்படி இலங்கையில் தெரிவான மொத்தம் பத்து மாணவர்களில் ஒரேயொரு தமிழ்மொழிமூல மாணவன் என்ற பெருமையையும் பெற்றுள்ளான். ஏனைய 9 பேரும் பெரும்பான்மையின மாணவர்களாவர்.

இந்த பத்துப் பேரில் மூவருக்கு அமெரிக்கா செல்ல வாய்ப்புள்ளதால் அதற்கான தெரிவு நாளையும் நாளைமறுதினமும் எதிர்வரும் தினங்களிலும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த நினைவு மண்டபத்தில் நடைபெறும். அதிலும் வினோஜ்குமாருக்கு அதிக வாய்ப்புள்ளதென கூறப்படுகிறது. (அ-2)

## ஒலிம்பியாட் கணித போட்டிக்கு தெரிவு

(பூந்தோட்டம்)

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவி சர்மிகா சர்வானந்தன் இவ் ஆண்டிற்கான சர்வதேச ஒலிம் பியாட் கணித போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் உள்ள லக்னோ நகரில் நடைபெற வுள்ள சர்வதேச ஒலிம்பியாட் போட்டிக்கு செல்லும் இவர் 2012 ஆம் ஆண்டு கனி ஷ்ட பிரிவின் கணித புதிர் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தினை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-9-266)

## தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு பிரதேசசபை நூலகங்கள் இணைந்து பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையே கட்டுரை, பேச்சு போட்டிகளை நடாத்தவுள்ளது.

இதில் பிரதேசசபை பொது நூலக மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை 10 மணிக்கு கட்டுரைப் போட்டியும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை பேச்சுப் போட்டியும் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கத் தவறியவர்கள் பேச்சுப் போட்டி நடைபெறும் நாள் அன்று நூலகருடன் தொடர்பு கொண்டு பங்குபற்றிக்கொள்ள முடியும் என பிரதேச சபைத் தவிசாளர் அ. ஜெபநேசன் தெரிவித்துள்ளார். (அ-6)


## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1976 இந்து வேளாளர் நட்சத்திரம்:-திருவோணம் 3 உயரம்:-5'9" கி.பா:-55, 12 இல் செவ். தொழில்:-சொந்த வாணிப நிலைய உரிமையாளர் B/409 | பிறப்பு:- 1978 இந்து வேளாளர் நட்சத்திரம்:- சதயம் 1 உயரம்: 5' கி.பா:-27, 4 இல் செவ். தகைமை: A/L G/086 |
| பிறப்பு:- 1979 இந்து வேளாளர் நட்சத்திரம்:-திருவாதிரை 1 உயரம்:-5'6" கி.பா:-14.25 தொழில்: நோர்வே PR B/557 | பிறப்பு:- 1988 இந்து வேளாளர் நட்சத்திரம்:- கேட்டை 3 உயரம்: 5'1" கி.பா:-48, 7 இல் செவ் தகைமை: Software Engineering Student G/080 |
| பிறப்பு:-1977 இந்து வேளாளர் நட்சத்திரம்:-அச்சுவினி 3 உயரம்:-5' கி.பா:-43, 8 இல் செவ். தொழில்:- Bsc விவசாய போதனாசிரியர் B/601 | பிறப்பு:- 1986 இந்து சைவக்குருக்கள் நட்சத்திரம்: ரேவதி 3 உயரம்: 5'3" கி.பா: 36, 3 இல் செவ் தகைமை:-பட்டதாரி தனியார் நிறுவன ஊழியர் G/095 |
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர் நட்சத்திரம்:-உத்தரட்டாதி 1 உயரம்:-5'5" கி.பா:-26.5, 4 இல் செவ். தொழில்:- MCA Consultant in information technology B/592 | பிறப்பு:- 1975 இந்து நட்சத்திரம்:- ஆயிலியம் 4 உயரம்: 5'2" கி.பா:35 தொழில்:-அரச முகாமைத்துவ உதவியாளர் G/098 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தவறான கருத்துக்கள் தொடர்பில் பசில் என்னைத் தொடர்பு கொள்ளலாம்

## சரியான விளக்கம் கொடுக்க தயாராகவுள்ளேன் என்கிறார் சம்பந்தன்

(கொழும்பு)

**அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் அக்கறை காட்டுவதாக இல்லை. அரசாங்கம் தீர்வுத்திட்டத்தில் இழுத்தடிப்புக்களையே மேற்கொண்டு வருகின்றது. அர்த்தபுஷ்டியான அதிகாரப்பரவலாக்கலுடனான தீர்வுக்காகவே நாம் பாடுபட்டு வருகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

இனப்பிரச்சினை தீர்வு குறித்தும் விடுதலைப்புலிகளைப் போல் கூட்டமைப்பு செயற்படுவதுடன் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு வந்தால் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்றும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்த கருத்து தொடர்பிலும் கேட்டபோதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை எழுத்து மூலம் நாம் சமர்ப்பித்திருந்தோம். அதற்கு இன்னமும் பதிலளிக்காத அரசாங்கம் எம்மீது குற்றஞ்சாட்டி வருவது வேடிக்கையானது.

விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டிலேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செயற்படுவதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்து கடும் கண்டனத்துக்குரியது. இது நாட்டு மக்களை ஏமாற்றுவதற்கான முயற்சியாகும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு செல்லுமாறு இந்தியா உட்பட எந்த நாடும் எமக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு செல்வதன் மூலம் எத்தகைய தீர்வை பெறலாம் என்பது தொடர்பில் எமக்கு யாராவது விளக்கமளித்தால் அது குறித்து நாம் ஆராய்ந்து பார்க்கலாம்.

13 ஆவது திருத்தச்சட்டத்தினை நாம் ஒருபோதும் தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் அதனைக் கட்டிவளர்த்து அர்த்தபுஷ்டியான அதிகாரப்பகிர்வு வழங்கப்படவேண்டும். இதனை இலங்கை- இந்திய அரசாங்கங்களும் ஏற்றிருந்தன. இது குறித்து இருநாடுகளின் பேச்சாளர்களும் கருத்துக்களை தெரிவித்திருந்தனர்.

அர்த்தபுஷ்டியான அதிகாரப்பரவலாக்கங்களுடனான தீர்வுத் திட்டத்தையே நாம் எதிர்பார்க்கிறோம். அதற்கான முயற்சிகளிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம். நடைமுறைப்படுத்தக்கூடிய யதார்த்தமான தீர்வொன்றே எமக்குத் தேவையாகும்.

தீர்வு விடயத்தில் நாம் நிதானமாகவும் பக்குவமாகவும் நடந்து கொள்கின்றோம். எழுத்துமூலம் வழங்கிய எமது திட்டத்திற்கு பதில் தராத அரசாங்கம் குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றது. கூட்டமைப்புத் தொடர்பான பசில் ராஜபக்ஷவின் கருத்தானது பொறுப்பற்ற செயற்பாடு என்பதுடன் கண்டிக்கத்தக்க விடயமாகும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில்கூட தீர்வுத்திட்டம் தொடர்பில் அரசாங்கம் முன்முயற்சிகளில் ஈடுபட்டு பிரேரணையினை முன்வைக்க வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது. அத்தகைய தீர்வுக்கு முன்வராத அரசாங்கம் எம்மீது குற்றஞ்சுமத்துவது தப்பித்துக் கொள்வதற்கான முயற்சியாகும்.

குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு அமைச்சர் பசில் ராஜபக்ஷ சாக்குப்போக்குக்களை கூறிவருகின்றார். இது ஏற்புடையதல்ல. கூட்டமைப்புக் குறித்த தப்பான கருத்துக்களை அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும். தப்பான கருத்துக்கள் தொடர்பில் பசில் ராஜபக்ஷ என்னிடம் வந்தால் அவருக்கு உரிய விளக்கங்களை கொடுப்பதற்கு நான் தயாராக உள்ளேன் என்றார். (அ-2)

# நீதித்துறைக்கு அச்சுறுத்தல்; சுயாதீன விசாரணை வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

(கொழும்பு)

எந்தவோர் நாட்டிலாவது பிரதம நீதியரசர் ஒருவர் நாட்டைப் பாதுகாத்துத் தருவதாகவும் ஆதலால் தனக்கு பிரதமர் பதவி பெற்றுத்தர வேண்டும் என்றும் கேட்டதுண்டா? என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க சபையில் கேள்வியெழுப்பினார்.

நீதித்துறைக்கு விடுவிக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பில் சுயாதீன ஆணைக்குழுவொன்றை அமைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்திய எதிர்க்கட்சித்தலைவர் நீதித்துறையினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தனது பூரண ஒத்துழைப்பினை வழங்கும் என்றும் உறுதியளித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழான கட்டளை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் கூறுகையில்,

நாடு இன்று சர்வாதிகாரத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கின்ற நிலையில் மக்கள் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு முடியாத நிலைக்கு முகம்கொடுத்து வருகின்றனர். நீதித்துறைக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமைகளுக்கு இடமளிக்க முடியாது. நீதித்துறையின் சுயாதீனத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கென நீதித்துறையினால் எடுக்கப்படும் எந்தவொரு முடிவுக்கும் ஐக்கிய தேசியக்கட்சி பூரண ஒத்துழைப்பினை வழங்கும்.

மேலும் எந்த நாட்டிலாவது பிரதம நீதியரசர் ஒருவர் தான் நாட்டைப் பாதுகாத்துத் தருவதாகவும் ஆதலால் தனக்கு பிரதமர் பதவியைப் பெற்றுத்தருமாறும் கேட்டதுண்டா? எனக்கேட்கவிரும்புகிறேன். காரணங்களே இல்லாத வகையில் சுமார் 22 வழக்குகள் விசாரணைகள் இன்றி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இங்கு அதிக பட்சமான நீதியரசர்கள் நேர்மையானவர்களாக இருக்கின்றனர் என்பதை இங்கு கூறிக்கொள்கிறேன். தற்போது நீதித்துறைக்கு எழுந்துள்ள அச்சுறுத்தல் தொடர்பில் சுயாதீனமான குழுவொன்றினை அமைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் அதன் அறிக்கை பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நீதித்துறை மீதான அச்சுறுத்தல் தொடர்பில் நாம் அரசாங்கத்தை குற்றம் சுமத்த முனையவில்லை. சுயாதீன விசாரணையொன்றினையே வலியுறுத்துகிறோம் என்றார். (அ-2)

# பெண் பிள்ளைகளின் உரிமைகளை பாதுகாக்க புதிய நடவடிக்கை

(கொழும்பு)

பல்வேறு காரணங்களாலும் இலகுவில் ஆபத்துக்கு ஆளாகும் பலவீனமான நிலையிலுள்ள பதினெட்டு வயதிலும் குறைவான பெண்பிள்ளைகளின் உரிமைகளை பாதுகாக்கவென புதிய நடவடிக்கையை தொடரவுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு கூறியுள்ளது.

பெண்களின் அந்தஸ்துக்கான ஐக்கிய நாடுகளின் ஆணைக்குழுவிடம் பல அங்கத்துவ நாடுகள் முன்வைத்த ஆலோசனைகளின் அடிப்படையில் இன்றையதினம் பெண்பிள்ளைகள் தினமாகக் கொண்டாட தீர்மானித்துள்ளது.

முதலாவதாக சர்வதேச பெண்பிள்ளைகள் தின கொண்டாட்டத்தை கருத்திற்கொண்டு அமைச்சு பெண்பிள்ளைகளைப் பாதுகாக்கும் புதிய ஏற்பாடுகளை செய்யவுள்ளது என அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கல்வி, சுகாதார வசதி, மொழி, குடும்ப அலகு, பெற்றோர் ஆதரவு, சமூக பாதுகாப்பு, பால்நிலை உரிமைகள் என்பனவற்றை பெண்பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுப்பதே சர்வதேச பெண்பிள்ளைகள் தினத்தைக் கொண்டாடுவதன் நோக்கமாகும் என அமைச்சின் அதிகாரி மேலும் கூறினார். (அ-2)



உலக உளநல நாள் யாழ்/ இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்றையதினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் வலயக கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் மங்கல விளக்கேற்றுவதையும், நிகழ்வின் தலைவரும் பிரதிக் கல்விப்பணிப்பாளருமாகிய த.இராசலிங்கம், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வைத்தியர் திருமதி முல்லை பரமேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ்/ இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் கண்காட்சியினை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்

(படங்கள்:-உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் இடாப்பில் 13 ஆம் திகதி வரை பெயர்களை இணைத்துக் கொள்ளலாம்

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் பெயர்ப்பட்டியல் தொடர்பான மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கு தற்போது சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதிவரை வாக்காளர்கள் தமது மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க முடியுமென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய வாக்காளர் பெயர்ப்பட்டியல் மாவட்ட தேர்தல் அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது காட்சிப் படுத்தப்பட்டுள்ள பட்டியலில் 2012 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பில் இணைத்துக் கொள்ளப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் காணப்படுவதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

வாக்காளர்களின் பெயர்கள் சேர்த்துக் கொள்ளப்படாதவிடத்து மாவட்ட தேர்தல்கள் செயலகத்திற்கு அது தொடர்பில் தெரியப்படுத்த முடியுமென அவர் சுட்டிக்காட்டினார்.

2012 ஆம் ஆண்டிற்கானவாக்காளர் இடாப்பில் வாக்காளர்கள் தமது பெயர்களை இணைத்துக் கொள்வதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவெனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டார். (அ-2)

# பேராசிரியர்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்யத் தயார்-அரசாங்கம்

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளில் ஐந்து கோரிக்கைகளை கால வரையறுக்குள் நிறைவேற்றுவது குறித்து அரசாங் கம் கவனம் செலுத்தி வருவதாக திறைசேரியின் செயலாளர் பீ.பி ஜயசுந்தர தெரிவித்துள்ளார். வரவு செலவுத் திட்டத்துடன் இந்த கால வரையறை ஆரம்பமாகிறது.நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு அதனுடன் தொடர்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் பேராசிரியர்களின் ஒன்றியம் ஆகியன ஒன்றாக இணைந்து இந்த செயற்றிட்டம் அமுல்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திறைசேரியின் செயலாளர் அனுப்பி வைத்த கடிதம் கிடைத்ததன் பின்னர் பல்கலைக் கழக பேராசிரியர்கள் நேற்று முன்தினம் நீண்டநேரம் கலந்தாலோசித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (எ-11)

# தாக்குதலுக்குள்ளான மேஜரின் விசாரணை அறிக்கை தயார்

### இராணுவத் தளபதியிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவினால் கொழும்பு ஹோட்டல் ஒன்றில் வைத்து அண்மையில் தாக்குதலுக்குள்ளான இராணுவ மேஜர் தொடர்பான விசாரணை அறிக்கை இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியவிடம் நேற்று முன்தினம் குறித்த அறிக்கை கையளிக்கப்பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய குறிப்பிட்டார். கடந்த மாதம் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவினால் குறித்த இராணுவ மேஜர் தாக்கப்பட்டதாக கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். நீதிமன்றில் மாலக சில்வா தன்னை தாக்கவில்லை எனவும் அதிர்ச்சியால் அந்த சம்பவம் இடம்பெற்றதாகவும் இர்ாணுவ மேஜர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய இராணுவம் மூன்று நபர்கள் கொண்ட குழுவை நியமித்து விசாரணைகளை மேற்கொண்டது. தாக்குதலுக்குள்ளான இராணுவ மேஜர் இராணுவ சட்டத்தை மீறியுள்ளாரென இந்த விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# ஆஸி.செல்ல முற்பட்ட அகதிகள் 60 பேர் இந்தியாவில் கைது

(சென்னை)

படகுமூலம் அவுஸ்திரேலியாவிற்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கை அகதிகள் சிலர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருச்சி, இராமநாதபுரம் மற்றும் நெல்லைமாவட்டங்களில் உள்ள இலங்கை அகதி முகாமில் வசித்து வந்த 25 அகதி குடும்பத்தைச் சேர்ந்த சுமார் 60 பேர் அவுஸ்திரேலியாவிற்குத் தப்பிச் செல்வதற்காக தூத்துக்குடி மாவட்டம் சிந்தலக்கரை கோவில் பகுதியில் தொடர்ந்து இரு தினங்க ளாக தங்கியிருப்பதாக பொலிஸாரு க்கு தகவல் கிடைத்தது.

இதன் அடிப்படையில் எட்டையபுரம் சட்டத்தரணி இலங்கை அகதிகளிடம் விசாரணை நடத்தினார். தப்பிச் செல்ல முயன்றவர்களில் ஆண்கள் 21 பேர், பெண்கள் 19, சிறுவர்கள் 7, சிறுமியர்கள் 8 பேர் அடங்குவர்.

இவர்களுடன் அகதிகள் குழுவைச் சேர்ந்த மேலும் ஐந்து பேர் பொலிஸ் விசாரணையில் தப்பிச் சென்றது தெரிய வந்துள்ளது. இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ-2)

# 2012.10 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1138-சிரியாவில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. 2 இலட்சம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★1634-டென்மார்க் மற்றும் ஜேர்மனியில் இடம்பெற்ற பெரும் வெள்ளத்தினால் 15 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★1801-காளையார் கோயிலைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் அதனையும் சுற்றியுள்ள காடுகளையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

★1811-ஜோன் ஸ்டீவன்ஸ் கண்டுபிடித்த ஜூலியானா என்ற முதலாவது நீராவிப் படகுக் கப்பலின் சேவை நியூயோர்க்கிற்கும் நியூ ஜேர்சிக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது.

★1852-அவுஸ்திரேலியாவின் மிகப் பழைமையான சிட்னி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

★1865- ஜமெய்க்காவில் நூற்றுக்கும் அதிகமான கறுப்பின மக்கள் அரசுக்கெதிரான எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இது அன்றைய பிரித்தானிய அரசால் நசுக்கப்பட்டதில் நாநூறுக்கும் அதிகமான கறுப்பினத்தவர்கள் கொல்லப்பட்டனர்.

★1899-இரண்டாவது போவர் போர் தென்னாபிரிக்காவில் ஐக்கிய இராச்சியத்துக்கு எதிராக ஆரம்பமானது.

★1941-மக்கெடோனியாவில் தேசிய விடுதலைப் போர் ஆரம்பமானது.

★1944-துனீசிய மக்கள் குடியரசு சோவியத் ஒன்றியத்துடன் இணைந்தது.

★1954-வட வியட்நாமை வியட்மின் படைகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன.

★1958-நாசாவின் முதலாவது விண்கலம் பயனியர் 1 சந்திரனை நோக்கி ஏவப்பட்டது. இது சந்திரனை அடையாமலே மீண்டும் இரண்டு நாட்களில் பூமியில் வீழ்ந்து எரிந்தது.

★1968- நாசா முதற் தடவையாக மூன்று விண்வெளி வீரர்களை அப்பல்லோ 7 விண்கலத்தில் விண்ணுக்கு ஏவியது.

★1984-சலேஞ்சர் விண்ணோடத்தில் சென்ற கத்ரின் சலிவன் விண்ணில் நடந்த முதலாவது அமெரிக்கப் பெண் என்ற பெருமையைப் பெற்றார்.

★1987- விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய அமைதிப் படை பவான் நடவடிக்கை என்ற பெயரில் போரை ஆரம்பித்தனர்.

★1998-கொங்கோவில் வானூர்தி ஒன்று தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதில் 40 பேர் உயிரிழந்தனர்.

★2002- பின்லாந்தில் கடைத் தொகுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஏழு பேர் உயிரிழந்தனர்.

**பிறப்புக்கள்**

★1738-ஆர்தர் பிலிப், நியூ சவுத் வேல்ஸ் முதலாவது ஆளுநர் (இ.1814)

★1820- ஆணல்ட் சதாசிவம்பிள்ளை, ஈழத்தின் தமிழறிஞர், தமிழாசிரியர், இதழாசிரியர், புலவர் (இ.1896)

**★1826-மாயூரம் வேதநாயகம்பிள்ளை, தமிழ்ப் புதின முன்னோடி (இ.1889)**

★1942-அமிதாப் பச்சான், இந்தி நடிகர்

★1962-ஆன் என்ரைட், அயர்லாந்து பெண் எழுத்தாளர்

**இறப்புக்கள்**

★1561-ஹுல்ட்றிச் சுவிங்கிளி, சுவிட்சர்லாந்து புரட்டஸ்தாந்துத் தலைவர் (பி.1484)

★1889-ஜேம்ஸ் பிரிஸ்காட் ஜூல், ஆங்கிலேய இயற்பியலாளர் (பி.1818)

★2006- ஏ.ஜே.கனகரத்னா, ஈழத்தின் பிரபல பத்திரிகையாளர், எழுத்தாளர் (பி.1934)

**வேதநாயகம்பிள்ளை**

மாயூரம் வேதநாயகம்பிள்ளை ஒரு புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர். இவர் 1878 இல் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் புதினம் தமிழில் வெளியான முதல் புதினம். இவர் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள குளத்தூரில் பிறந்தார். இவரின் பெற்றோர் திருச்சிராப்பள்ளியில் இருந்து மதுரைக்கு தொடர் வண்டியில் செல்கையில் குளத்தூர் தொடர்வண்டி நிலையத்தில் இவர் பிறந்தார்.

தந்தையார் சவரிமுத்துப்பிள்ளை, தாயார் ஆரோக்கிய மரிஅம்மையார். 1876–1888 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது தமது சொத்துக்கள் அனைத்தையும் கொடையளித்தார்.

**வாழ்க்கை**

தொடக்க கல்வியைத் தமது தந்தையிடம் கற்ற வேதநாயகம் ஆங்கிலம், தமிழ்மொழிக் கல்வியை தியாகராசபிள்ளை என்பாரிடம் பயின்றார். சிறு வயதிலேயே திருமணங்கள், விருந்தினர் வருகை போன்ற நிகழ்வுகளின் போது நகைச்சுவையான கவிதைகளை எழுதினார்.

இவர் நீதிமன்றங்களில் பதிவாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றிய பின் 1856 இல் தரங்கம்பாடியில் முனிசீஃப் வேலையில் அமர்ந்தார். மாயவரம் மாவட்ட முனிசீப்பாக 13 ஆண்டுகள் பணி புரிந்தமையால் இவரை மாயவகலாயினர்.

**ஆக்கங்கள்**

முதன்மைக் கட்டுரை: வேதநாயகம்பிள்ளை நூற்பட்டியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிச்சேவை முரண்பாட்டுக்கு அரசுக்கு எதிரான சக்திகளே காரணம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

நாட்டின் நிறைவேற்று அதிகாரத்திற்கும் நீதிச்சேவைக்கும் இடையேயான முரண்பாடுகள் வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு வழிவகுக்குமென எச்சரிக்கை விடுக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார நீதிச்சேவை ஆணைக்குழு செயலாளர் மஞ்சுள திலகரட்னவின் தாக்குதலின் பின்னணியில் அரசுக்கு எதிரான சக்திகள் இருப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக டாக்டர் வசந்த பண்டார மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தை நெருக்கடியில் தள்ளுவதற்கு வெளிநாட்டு மற்றும் அவர்களுக்கு துணைபோகும் உள்ளூர் சக்திகள் நிறைவேற்று அதிகாரத்திற்கும் நீதித்துறைக்குமிடையே முரண்பாடுகளை ஏற்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. இதன் ஓர் அங்கமே நீதிச்சேவை ஆணைக்குழு செயலாளர் மீதான தாக்குதலாகும்.

இவ்வாறான செயற்பாடுகளில் அரசாங்கம் ஒருபோதும் ஈடுபடாது. அரசுக்கு எதிரான சக்திகளே இவ்வாறான தாக்குதலை நடத்தியுள்ளன. ஆனால் இவ்வாறானதோர் முரண்பாடு தோன்றிய சூழ்நிலையில் அரசாங்கம் திவிநெகும சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முனைகின்றமை மக்கள் மத்தியில் பிழையான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும்.

பிரதம நீதியரசர் இன்னும் அப்பதவியில் 11 வருடங்கள் இருப்பார். எனவே, இம்முரண்பாட்டை தீர்த்துக் கொள்ளாவிட்டால் அது நாட்டுக்கு நல்லதல்ல.

அதேவேளை இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்ட ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் தொழில்நுட்பக் குழுவான ஹெனீ மெகாலி தலைமையிலான குழுவினர் மார்ச் மாதம் இலங்கை தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளனர்.

நிச்சயம் இது எமக்கு எதிரான அறிக்கையாகத்தான் இருக்கும். எனவே, தற்போது தோன்றியுள்ள நிறைவேற்று அதிகாரம் நீதித்துறைக்கு இடையேயான முரண்பாடு நீடித்தால் இலங்கையில் சட்டம் அமுலில் இல்லை என்றும் அவ் அறிக்கையில் குறிப்பிடலாம். இது சர்வதேச விசாரணைக்கு மேலும் வலுச் சேர்க்கும் என்றார். (அ-2)

# வர்த்தக நிலையத்தில் தீ; மதுபானசாலை எரிந்தது

## மின்ஒழுக்கால் வந்தவினை

(பூந்தோட்டம்)

வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள சுப்பர் மார்க்கட் வர்த்தக நிலையத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை தீப்பற்றியதால் பல பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

மின்ஒழுக்கினால் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படும் இந்த தீ விபத்தினால் வர்த்தக நிலையத்தில் இருந்த மதுபானசாலை முற்றாக சேதமடைந்ததுடன் ஏனைய பகுதிகளிலும் மின்சார வயர்கள் எரிந்துள்ளது. இதன் காரணமாக ஏனைய இடங்களில் கரும்புகைத் துகள்கள் பரவியுள்ளதுடன் வர்த்தக நிலையம் நேற்று முன்தினம் மூடப்பட்டது. தீ விபத்து ஏற்பட்டதை அடுத்து பொலிசார் விரைந்து வந்து தீயை அணைத்ததுடன் இத் தீவிபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-266)

# பத்திமா அன்னை திருக்காட்சி திருவிழா

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பத்திமா அன்னை திருத்தல திருக்காட்சித் திருவிழா நேற்றையதினம் பிற்பகல் 5 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமானது.

திருவிழாவில் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 5 மணிக்கு நற்கருணை விழா நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் சனிக் கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள் ளது. 11 மணியளவில் நோயாளர்களுக்கான குணமாக்கல் வழிபாடு அருட்தந்தை லோறன்ஸ் தலைமை யில் நடைபெறவுள்ளது. அனைவரையும் இதில் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரை பெற்றுக் கொள்ளுமாறு பரிபாலகர் வணபிதா ச.இயூஜீன் பிரான்சிஸ் கேட்டுள்ளார். (அ)

## வடமாகாண இலக்கிய விழா ஆய்வரங்கில்

# பேராளர்களாக பங்கு கொள்ளும் விருப்பை விரைவில் வெளிப்படுத்தவும்

(பூந்தோட்டம்)

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 26 ஆம் மற்றும் 27 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள வடமாகாண இலக்கிய விழாவில் வவுனியா மாவட்டத்தில் இருந்து ஆய்வரங்கில் பேராளர்களாக கலந்து கொள்ளவுள்ளவர்கள் தமது சம்மதத்தினை வவுனியா பிரதேச செயலகத்தில் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கடிதம் மூலமாகவோ தொலைபேசி மூலமாகவோ அறியத்தருமாறு வவுனியா பிரதேச செயலாளர் கோரியுள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் சார்பில் வவுனியாவின் கவிதை வளர்ச்சி, வவுனியாவின் புனைக்கதை வளர்ச்சி, வவுனியாவின் நாடக வளர்ச்சி, வவுனியாவின் குறும்பட வளர்ச்சி எனும் தலைப்புக்களில் இடம் பெறவுள்ள ஆய்வரங்குகளிலேயே பங்கு பற்றவுள்ளவர்களை அறியத் தருவதுடன் இவர்களுக்கான போக்குவரத்து, உணவு, தங்குமிடம் என்பன வட மாகாண கல்வி அமைச்சினால் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ-9-266)

# பொதுக்கூட்டம்

(பூந்தோட்டம்)

வவுனியா பொழுதுபோக்கு கழகத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கழக வளாகத்தில் நடைபெறவுள்ளதாக அதன் தலைவர் றோய் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

கழகத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுதல் மற்றும் புதிய நிர்வாகத்தெரிவு என்பன இடம்பெறவுள்ளமையினால் அனைத்து கழக அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோரியுள்ளதுடன் புதிதாக அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளவுள்ளவர்கள் அன்றைய தினம் சமுகமளித்து தமது அங்கத்துவத்தை பதிவு செய்து கொள்ளுமாறும் கழக வளர்ச்சிக்கான கருத்துக்களை முன்வைக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9-266)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(சிவநகர்)

மத்திய சுற்றாடல் அதிகார சபையும் கிளிநொச்சி மாவட்ட சுற்றாடல் அதிகார சபை பிரிவினரும் இணைந்து நடத்தும் டெங்கு விழிப்பணர்வு செயலமர் வும் சிரமதான நிகழ்வும் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங் களில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை நடைபெறவுள்ளது.

பிலிசரு அனுசரணையுடன் நாடளாவிய ரீதியில் நடைபெறும் இந்நிகழ்வு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் நகரை அண்டிய பகுதிகளில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் சகல திணைக்களங்களும் பொதுமக்களும் ஒன்றிணைந்து இந்நிகழ்வை நடத்தவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சுற்றாடல் பொறுப்பு அலுவலர் திருமதி அ.தமிழ்ச்செல்வி தெரிவித்துள்ளார். (அ-3-254)

# மதுபானம் கடத்திய பெண் காதலருடன் கைதானார்

குவைத்தில் கள்ளத்தனமாக மதுபானங்களை கடத்தி விநியோகித்து வந்த இலங்கை பெண் ஒருவர் அவருடைய இந்திய காதலருடன் கைது செய்யப்பட்டுள்ளார். கைத்தான் நகரில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டதோடு அவர்களிடம் இருந்து 280 மதுபான போத்தல்கள் மீட்கப்பட்டன.

இவர்களின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்டிருந்த கைத்தான் பொலிஸார் அவர்களை கண்காணிப்பதற்கான விசேட குழு ஒன்றை ஈடுபடுத்தியிருந்ததாக கூறப்படுகிறது. அவர்களின் தீவிர விசாரணையின் பின்னர் குறித்த இருவரும் கையும் களவுமாக பிடிபட்டதாக குவைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கைதான இருவரும் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# லயன்ஸ் கழக ஏற்பாட்டில் வெள்ளைப்பிரம்பு தினம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகமும் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகம் விழிப்புலன் வலுவிழந்தோர் நிறுவனமும் இணைந்து நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் சுன்னாகம் லயன்ஸ் கழக தலைவர் லயன் ரி.தேவராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் சந்தியில் இருந்து வாழ்வகச் சிறார்கள் வெள்ளைப் பிரம்பை தாங்கி விழிப்புணர்வு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிராந்தியத்தலைவர் லயன் கே.சற்குணதேவனும் லயன் சீமாட்டி ச.இந்திராவும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)






யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 5 ஆம் திகதி உலக ஆசிரியர் தின நிகழ்வுகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் மலர்மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆசிரியருக்கு சால்வை அணிவித்து நினைவுப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

67


# மகா பராக்கிரமபாகு

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா



**பராக்கிரமபாகுவின் திக்விஜயம்**

இராசரட்டை இராச்சியத்தை மீண்டும் பெற்ற கஜபாகு, கங்காராதக்கையைத் தன் அரசவதிவிடமாக்கிக்கொண்டு வாழலானான். இத்தருணத்தில் மாணாபரணன் மீண்டும்




பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் அரச விழாக்களில் பயன்படுத்தும் அரசகொடி

கஜபாகுவுடன் நட்புப் பாராட்டி ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள தன் தூதுவர்களை அனுப்பி வைத்தான். அதனை ஏற்காத கஜபாகு மண்டலகிரி விகாரைக்குச் சென்று, எனக்குப் பின்னர் இந்த இராச்சியம் பராக்கிரமபாகுவைச் சேரும் எனவாக்குறுதி செய்து கொண்டான். ஒரு கல்வெட்டிலும் அதனைச் சாசனமாகப் பதித்துவைத்தான். இருபத்திரண்டு வருட ஆட்சியின் பின்னர் கஜபாகு நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தான்.

அவ்வேளையில் கஜபாகுவின் அமைச்சர்கள் ஒன்று சேர்ந்து உருகுணை மன்னன் மாணாபரணனுக்கு உடன் வந்து இராச்சியத்தை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தி அனுப்பிவைத்தனர். கஜபாகு மரணமான செய்தியைக் கேள்விப்பட்ட பராக்கிரமபாகு சேனாவீரர்களோடு விரைந்து வந்து புலத்தி நகரைத் தனதாக்கிக் கொண்டான். புலத்தி நகரைக் கைப்பற்றும் ஆசையோடு தன் படைவீரர்களோடு விரைந்து வந்து மாணாபரணன் பராக்கிரமபாகுவின் படைவீரர்களோடு பொருதித் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. மாணாபரணனால் மகாவலிகங்கையைக் கடக்க முடியவில்லை. பராக்கிரமபாகுவின் படை முக்கிய கடவைகளில் நின்று தடுத்துநிறுத்தியது. எனினும் ஏனைய வீரர்களுடன் மாணாபரணன், புலத்தி நகரிலுள்ள பாதுகாப்பற்ற ஒரு கடவையூடாக நகரினுள் புகுந்தான். பராக்கிரமபாகுவின் படைகளை மூர்க்கமாகத் த்தாக்கி நிலைகுலைய வைத்தான். அதனால் பராக்கிரபாகுவின் படை பின்வாங்கி நாலந்தாவில் முகாமிட்டுச் சில காலம் தங்க நேர்ந்தது.


**தொடர்ந்த மோதல்கள்**

பராக்கிரமபாகுவின் ஆதிக்கத்தின் கீழ் தக்கிணதேசமும் இராஜரட்டையும் வந்தன. ஆனால், உருகுணை மட்டும் அவன் ஆட்சியில் அடங்காதிருந்தது. அதனால் பராக்கிரமபாகுவுக்கும் மாணாபரணனுக்குமிடையே தொடர்ந்து மோதல்கள் நிகழ்ந்து வந்தன. மாணாபரணனின் தளபதிகளில் ஒருவனான மஹிந்தன் என்பவன் ஒரு சைனியத்துடன் சாரோகமம் என்றவிடத்தில் அமைந்திருந்த கோட்டையில் கேசதாதுவின் தலைமையில் நிலைகொண்டிருந்த போர் வீரர்கள் மீது படையெடுத்தான். ஆனால், மகிந்தனின் வீரர்களைக் கேசதாது, துரத்தியடித்தான். மறுதடவையும் மகிந்தன் படையுடன் தலின்கமம் என்ற கோட்டையைத் தாக்கியபோது தோல்வி கண்டு ஓடித்தப்பினான். பின்னர் புனா என்றவிடத்தினைத் தாக்கிய மாணாபரணனின் தளபதிகளையும் வீரர்களையும் எவருமே எஞ்சிச் செல்லாத விதத்தில் நிலத்தில் சடலமாக வீழ்த்தி அழித்தனர். இவ்வாறாக பராக்கிரமபாகுவின் படைகளைப் பலவிடயங்களில் மாணாபரணனின் சேனை தாக்கித் தோல்வியைத் தழுவிக் கொண்டது. தேவசேனாதிபதி, றக்காதிகாரி, இலங்காபுரன் போன்ற பராக்கிரபாகுவின் வலிமைமிக்க தளபதிகளின் வாட்களுக்கு மாணாபரணனின் படைவீரர்கள் பலியாகி யுத்த களத்திலே சடலங்களாகி நிரப்பினர்.



பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்துக்குரிய சயனநிலை புத்தர்சிலை

இந்நிலையில் பராக்கிரமபாகு, மாணாபரணனை இந்தப் பிரதேசத்தில் தோற்கடிக்காவிடில் உருகுணையிலும் நிம்மதியாக வாழவிடக்கூடாது என முடிவு செய்தான். அதனால் தன் முக்கிய தளபதிகளான தேவிலா, லோகா, அரக்கம்மநாதன், கன்சிகு நாயக்கன் முதலானோர் தலைமையில் பராக்கிரமபாகு படைஅணிகளை உருகுணையைத் தாக்குவதற்கு அனுப்பி வைத்தான். இதனால் மாணாபரணனின் படையணியில் ஒரு பகுதியினர் உருகுணையைக் காப்பாற்ற அங்கு மீளவேண்டியேற்பட்டது. அதேநேரம் மாணாபரணனின் தளபதிகளில் ஒருவனான நாராயணன் பெரும் படையோடு பராக்கிரமபாகுவின் கவனத்தைக் கலைக்குமாற்போல அனுராதபுரத்தின் மீது படையெடுத்தான். இப்படையெடுப்பை ஆரம்பத்திலேயே இடைநடுவில் பராக்கிரமபாகுவின் படையணி ஒன்று முறியடித்தது. பராக்கிரபாகுவின் சேனாவீரர்களால் சுற்றிவளைக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் பராக்கிரமபாகுவின் முக்கிய தளபதிகள் காயம்பட்டுச் சரிந்தபோது பராக்கிரமபாகுவே யானையிலேறி யுத்தகளத்திற்குப் படை நடாத்திச் சென்றான். வாளை ஏந்தி எதிரிகளின் சிரசுகளைத் துண்டித்துத் தள்ளினான். மாணாபரணன், வெகு சிரமத்தின் மத்தியில் உருகுணைக்கு உயிர்தப்பி வர நேரந்தது.




தூபராம விகாரை

பராக்கிரபாகு நீண்டகாலமாக இலங்கை முழுவதற்கும் மன்னனாகும் குறிக்கோளுடன் இருந்தான். கஜபாகுவை வெற்றி கொண்டபின் இராஜரட்டையைப் பெற்றுக் கொண்டான். அதற்காகவும் உருகுணை மாணவர்மனுடன் நீண்டகால யுத்தம் புரியநேர்ந்தது. இறுதியில் பராக்கிரமபாகு (கி.பி. 1153) புலத்திநகரில் இலங்கையின் சக்கரவர்த்தியாக முடிபுனைந்தான். தட்சிண தேசத்தின் அரசனாக வந்தத்தின் பின்னர் பதினைந்து ஆண்டுகளின் பின்னரே இராஜரட்டையை தன் நாட்டுடன் சேர்த்துக் கொள்ள முடிந்தது.

இந்நிலையில் உருகுணை மன்னனான மாணாபரணன், பராக்கிரமபாகு மீதுள்ள பயத்தினாலும் நோயினாலும் படுக்கையில் வீழ்ந்தான். தன் மகனும் இளவரசனுமான கீர்த்தி ஸ்ரீமேகனையும் அரண்மனை மகஷியையும் அமைச்சர்களையும் அழைத்து, "புலத்தி நகரில் பாதுகாப்பாகவிருந்த புத்தரின் தந்ததாதுவையும் ஜயகலசத்தையும் நான் இங்கு எடுத்து வந்து வைத்திருக்கும் தப்பான செயலின் விளைவால் நான் இன்று படுக்கையில் வீழ்ந்துள்ளேன். மீண்டும் எழுவேன் என்பதில் நம்பிக் கையில்லை. நான் மரணமாகி இவ்வுலகிலிருந்து அகன்றதும் பராக்கிரமபாகு மன்னனிடம் சென்று இந்த அரசை அவரிடம் ஒப்படைத்து விட்டு, அவருடைய ஆணைக்குட்பட்டு வாழ்வீர்களாக" என்றான். அவன் விழிகள் கலங்கின.

மாணாபரணன் மரணமடைந்த செய்தியை அறிந்த பராக்கிரமபாகு, மீண்டும் இரண்டா வது தடவையாக இலங்கை முழுவதற்கும் முடிபுனைய எண்ண மிட்டான். பொலநறுவை நகரம் விழாக்கோலம் பூண்டது. தெருவெங்கும் வாழைகள் கட்டப்பட்டு தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டன. முடிபுனைந்து யானையில் அமர்ந்து ஊர்வலம் வந்தான்.



தெமிழ மகாசாய

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி மற்றும் காசோலை பிணக்குகளே பொலிஸாரிடம் அதிகம் பதிவாகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலையத்தில் காணி மற்றும் காசோலை மோசடி சம்பந்தமான முறைப்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக யாழ்.பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காணி மோசடிகள் தொடர்பிலான முறைப்பாடுகள் பெரும்பாலும் உறவினர்களுக்குள்ளேயே இடம்பெறுவதாகவும் காசோலை மோசடிகள் தொடர்பிலான முறைப்பாடுகள் வர்த்தகர்களுக்கெதிராக இடம்பெறுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவிக்கையில்,

கடந்த 6 மாத காலப்பகுதிக்குள் காசோலை மோசடிகள் தொடர்பிலான முறைப்பாடுகள் என்றுமில்லாதவாறு திடீரென அதிகரித்து காணப்படுகின்றது. இதற்கு வர்த்தகர்கள் உட்பட பலர் பல்வேறு காரணங்களைக் கூறினாலும் காசோலை மோசடியென்பது தண்டனைக்குரியதொன்றாகும்.

பெரும்பாலும் கடை கடைகளாக சென்று கடன் அடிப்படையில் வர்த்தகர்களுக்கு விற்பனை பொருட்களை வழங்கிவிட்டு சிறிது காலம் என்ற பின்னர் தாம் விற்பனை செய்த பொருட்களுக்கான பணத்தை வாங்கச் செல்லும் அவர்களுக்கு வர்த்தகர்கள் காசோலைகளை வழங்குகின்றனர்.

எனினும் குறித்த வர்த்தகரின் வங்கிக் கணக்கில் பணம் வைப்புச் செய்யப்படாமையால் அக்காசோலை மீளத்திரும்பி விடுகின்றது. இதனால் விநியோகஸ்தர்கள் வர்த்தக உரிமையாளர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்கின்றனர்.

வர்த்தகர்களிடம் இடம்பெறுகின்ற விசாரணைகளின் போது தொழிலில் நட்டம் ஏற்பட்டுவிட்டதாகவும் குறித்த கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கு காலம் போதாதென்றும் கூறுகின்றனர்.

இவ்வாறான முறைப்பாடுகள் பெரும்பாலும் பொலிஸாரினால் கையாளப்பட்டு இரு பகுதியினரையும் ஒரு இணக்கப்பாட்டிற்குள் கொண்டு வந்து பகுதி பகுதியாக குறித்த பணத்தொகையை மீளச் செலுத்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு தீர்த்து வைக்கப்படுகின்றது.

காசோலைக்கு அடுத்தபடியாக யாழில் முதன்மை வகிப்பது காணி தொடர்பிலான பிணக்குகளே. இவை பொலிஸாரினால் இணக்கப்பாட்டுக்கு கொண்டு வர முடியாததோடு நீதிமன்றங்களிலேயே வழக்கு பதிவு செய்யப்படுகின்றது. உறவுகளுக்கு இடையில் நடைபெறும் இக் காணி முரண்பாடுகள் அடிதடிச் சம்பவங்களிலும் முடிவடைகின்றது என்றும் அவ் அதிகாரி தெரிவித்தார். (அ-4)

# வாகன விபத்தில் மூவர் உயிரிழப்பு

(வேவல்தெனிய)

கொள்கலன் வண்டியுடன் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டியில் சென்ற மூவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு-கண்டி பிரதான வீதியில் அமைந்துள்ள வேவல்தெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 5.15 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த கொள்கலனுடன் கொழும்பிலிருந்து கண்டி நோக்கி சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியே நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இச் சம்பவத்திலேயே மூவரும் உயிரிழந்துள்ளனர். இவர்கள் வாஸ்து நிபுணர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# மஞ்சுள மீது திட்டமிட்டே தாக்குதல் நடத்தப்பட்டது

## மங்கள எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொலை செய்யும் நோக்கிலேயே நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மஞ்சுள திலகரட்ன மீது திட்டமிட்டு கொலை செய்யும் நோக்கில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நீதித்துறையில் அதிகரித்துள்ள தலையீடுகளுக்கு எதிராக குரல் கொடுத்தமையாலேயே அவர் மீதான இந்த கொலை முயற்சி இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் தற்போது அவர் பாதுகாப்பு கருதி தமது இருப்பிடத்தை மாற்றிக் கொண்டுள்ளார். அத்துடன் அரசாங்கத்திடம் மேலதிக பாதுகாப்பினையும் அவர் கோரியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் குறித்து ஐக்கிய தேசிய கட்சி தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஒஸ்லோவில் உண்ணாவிரதம்; நேற்று முடிபுக்கு வந்தது

(கொழும்பு)

நோர்வே அரசாங்கத்தின் கீழ் இயங்கி வரும் சிறுவர் காப்பகத்தின் நடவடிக்கைகளை கண்டித்தும் அதனிடமிருந்து தமது பிள்ளைகளை விடுவித்துக்கொள்ளும் வகையிலும் இலங்கைத் தாய்மாரினால் ஒஸ்லோவில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் 10 ஆவது நாளான நேற்றைய தினம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒஸ்லோவில் அமைந்துள்ள மிகப் பழைமைவாய்ந்த டொம் தேவாலயத்தில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் மேற்படி தேவாலய நிர்வாகம் எழுத்து மூலமான உத்தரவாதம் அளிக்கப்பட்டதையடுத்தே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்திருப்பதாக மேற்படி நபர்களின் இரு தாய்மாரும் தெரிவித்துள்ளனர்.

உண்ணாவிரதம் இருந்து வந்த தாய்மாரிடம் பேச்சுக்களை நடத்திய டொம் தேவாலய நிர்வாகம் தாம் இவ்விடயம் தொடர்பில் நோர்வே அரசினதும் சிறுவர் நல அமைச்சினதும் அதேநேரம் சிறுவர் நல காப்பகத்தினதும் கவனத்திற்கு கொண்டு வருவதாக உறுதியளித்ததுடன் எழுத்து மூல உத்தரவாதமும் கொடுத்துள்ளது. (அ-2)

# மஞ்சுள மீதான தாக்குதலுக்கு அரசை குற்றம் சாட்ட வேண்டாம்

## அமைச்சர் நிமால் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் தொடர்பில் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீதான தாக்குதல் சம்பவத்தின் பின்னணி குறித்து எதிர்க்கட்சிகளை விடவும் அரசாங்கமே அறிந்துகொள்ள ஆசைப்படுகின்றது.

குற்றச் செயல்கள் இடம்பெற்றால் அரசாங்கத்திற்கும் நாட்டுத் தலைவருக்கும் எதிராக சேறு பூசுவதனை சில கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வழமையாகக் கொண்டுள்ளனர்.

அரசாங்கத்தை நெருக்கடிக்குள் ஆழ்த்தும் நோக்கில் சில தரப்பினர் தொடர்ச்சியாக செற்பட்டு வருகின்றனர் என்பதனை விசேடமாக சொல்லத் தேவையில்லை.

உலகக் கிண்ணப் போட்டித் தொடருக்காக உலக ஊடகவியலாளர்கள் குழுமியிருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன் பின்னணி என்ன என்பதனை இதன்மூலம் புரிந்து கொள்ள முடியும். சம்பவம் தொடர்பில் முழு அளவிலான விசாரணைகள் நடத்தப்படும்.

நீதிமன்றக் கட்டமைப்பின் அழுத்தங்களை பிரயோகிப்பதற்கான தேவையோ கால நேரமோ அரசாங்கத்திற்கு கிடையாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பயனாளிகள் தெரிவு குறித்து ஆட்சேபனை தெரிவிக்கலாம்


## பரிசீலனைக்கு தயார்-வவு.பிரதேச செயலாளர்

(பூந்தோட்டம்)

வவுனியா தாண்டிக்குளம் பிரதேசத்தில் தற்போது வழங்கப்படவுள்ள இந்திய வீட்டுத் திட்டத்தில் பயனாளிகள் தெரிவில் ஆட்சேபனையிருப்பின் அது தொடர்பில் பரிசீலிக்கப்படுமென வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

தாண்டிக்குளம் பிரதேசத்தில் மீள்குடியேறியோருக்கு இந்திய வீட்டுத்திட்டத்தின் மூலமாக வீடமைக்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் இதற்கான பயனாளிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றிருந்தது. எனினும் இப்பயனாளிகள் தெரிவில் வீடற்றவர்களுக்கு வீடுகள் வழங்கப்படவில்லை என பொது மக்கள் பலர் குற்றம் சாட்டியிருந்த நிலையில் இது தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாண்டிக்குளம் வீட்டுத்திட்டம் தொடர்பில் ஆட்சேபனைகள் இருப்பதாகவும் தமக்கு வீட்டுத்திட்ட பயனாளிகள் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு தகுதியிருந்தும் அவை இணைத்துக்கொள்ளப்படவில்லை என எண்ணுபவர்களும் பிரதேச செயலகத்தில் தமது ஆட்சேபனைகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவை தொடர்பில் பரிசீலனை செய்யப்படும் எனவும் தெரிவித்தார். (அ-9-266)





சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தின் அனுசரணையுடன் உருத்திரபுரம்– மேற்கு அறநெறி பாடசாலை மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது கல்வி கற்கும் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் முன்னாள் அதிபர் கா.நாகலிங்கம் வரவேற்கப்படுவதையும் மாணவனுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:– சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் இலங்கை படையினருக்கு பயிற்சியா?

## முடிவெடுக்கப்படும் என்கிறார் கருணாநிதி

இலங்கை இராணுவத்தளபதி மற்றும் 45 உயரதிகாரிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் இந்தியாவுக்கு பயிற்சிக்காக செல்லவுள்ளனர். இலங்கை இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக்கூடாது என்பதுதான் ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுபூர்வமான கோரிக்கை என தி.மு.க. தலைவர் கருணாநிதி பதிலடி கொடுத்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கை இராணுவத்தளபதி ஜெகத் ஜயசூர்ய இலங்கை சிறப்பு படையை சேர்ந்த 45 உயரதிகாரிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் இந்தியாவுக்கு பயிற்சிக்காக செல்லவிருப்பதாக கூறியிருக்கிறாரே?

அவர் மாத்திரமல்ல இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் இலங்கை அமைச்சருமான பசில் ராஜபக்ஷவும் இதையேதான் கூறியிருக்கிறார்.

இலங்கை இராணுவ வீரர்களுக்கு தமிழகத்தில்தான் பயிற்சி அளிக்கப்படும் என்றும் அதை எவராலும் தடுக்க முடியாதென்றும் கூறியிருக்கிறார்.

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதை தடைசெய்ய முடியாது என்று உச்ச நீதிமன்றம்கூட ஒரு தீர்ப்பில் தெரிவித்துள்ளது.


எனினும் அதே தீர்ப்பில் இலங்கை இராணுவ வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படுவது என்பது அரசின் கொள்கை ரீதியான முடிவு என்றும் அந்த விடயத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் விளக்கி இருக்கிறது.

மத்திய இராணுவ இணை அமைச்சர் பல்லம் ராஜு கூறும்போது, இலங்கை-இந்தியா நட்புநாடு என்ற அடிப்படையில் இலங்கை வீரர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படும். மாநில அரசு சார்பில் இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மத்திய அரசு பரிசீலிக்கும் என்று கூறியிருக்கிறார்.

எனவே, இந்தப் பிரச்சினையில் முடிவெடுப்பது என்பது மத்திய அரசு காலம் தாழ்த்தாது இதில் நல்லதோர் முடிவினை எடுப்பார்கள், எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றேன் என அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தெற்கை சேர்ந்த பாலசுப்பிரமணியம் கபிலன் அண்மையில் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் யாழ். மாவட்ட நீதி நிர்வாக வலயத்துக்கான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் பழைய மாணவனும் அச்சுவேலி PC SPOT IT CAMPUS இன் முகாமைத்துவப் பணிப்பாளருமாவார். (அ-9)

## குறைபாடுகள் தொடர்பில் ஆணையாளருக்கு முறைப்பாடு

(பூந்தோட்டம்)

வவுனியா செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுவதாகவும் அதற்கு தீர்வு காணுமாறும் கோரி வடமாகாண கூட்டுறவு ஆணையாளருக்கு 48 பேர் கையொப்பம் இட்டு கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் குழு தலைவர் மற்றும் செயலாளர் என முகவரியிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் சட்டரீதியிலான முறைப்பாடுகள் மற்றும் நிதி தொடர்பான முறைப்பாடுகள் உட்பட 9 குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளதுடன் அவை தொடர்பாக தீர்வினையும் வேண்டியுள்ளனர்.

இதேவேளை, இக்கடிதத்தின் பிரதிகளை வடமாகாண ஆளுநர் வவுனியா அரசாங்க அதிபருக்கும்அனுப்பிவைத்துள்ளனர்.(அ-9-266)

## தபால் அலுவலகங்களில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுகின்றன

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தபால் அலுவலகங்களில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாகவும் இவை நிரப்பப்படாது போகுமாயின் தபால் அலுவலகங்கள் அடுத்த வருடம் மூடவேண்டி வரலாம் எனவும் தபால் ஊழியர் சங்கங்கள் தெரிவித்தன.

ஊழியர் பற்றாக்குறை காரணமாக தபால் அலுவலகங்களில் கடமைகளில் ஒழுங்கான கட்டமைப்பை பேண முடியாதுள்ளதாக தபால் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் பண்டார கூறினார்.

தபால் அலுவலகங்களில் போதிய ஆளணி இல்லாததால் தபால் அனுப்புதல் போன்ற அடிப்படை வேலைகள் மட்டுமே நடக்கின்றன. இந்த போக்கு தொடருமாயின் தபால் அலுவலகங்கள் மூடப்பட்டு விடும். அப்போது நாம் வேறு வேலை தேட வேண்டியிருக்கும் என அவர் கூறினார்.

ஆயிரத்து 800 புதிய ஊழியர்களை நியமிக்க பரீட்சை வைக்கப்பட்டு பெறுபேறும் வெளியிடப்பட்டுள்ளது. ஆயினும் புதிய நியமனங்கள் இன்னும் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது காணப்படும் நிதி நிர்வாக தடைகள் அகற்றப்படாதுவிடின் தபால் திணைக்களம் விரைவில் மூடப்படலாம் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

## ரம்ஸா சரணாலயத்தில் 15 ஏக்கர் காணி நாசம்

ஆராச்சிக்கட்டு ஆனைவிழுந்தான் ரம்ஸா பறவைகள் சரணாலயத்தில் ஏற்பட்ட தீயினால் சுமார் 15 ஏக்கர் காணி எரிந்து சாம்பலாகியுள்ளது. இச் சரணாலயத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை இந்த தீ பற்றிக் கொண்டதாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

ஆனைவிழுந்தான் ரம்ஸா பறவைகள் சரணாலயம் வெளிநாட்டு சுற்றுலா பறவைகளின் சொர்க்காபுரியாக கருதப்படுகின்றது. சுற்றுலா பறவைகள் நிரந்தரமாக இங்கு வருகை தருகின்றன.

ஆனைவிழுந்தான் பறவைகள் சரணாலயம் உலகில் மூன்றாவது குளிர்ச்சியான ரம்ஸா பறவைகள் சரணாலயம் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது

தீயின் காரணமாக சுற்றுலாப் பறவைகளும் முட்டைகளும் எரிந்து இருப்பதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர் .(அ-2)

## கல்வி அமைச்சருக்கு இராணுவ தளபதி பதவி வழங்கப்படுமா? ரவி எம்.பி. கேள்வி

(கொழும்பு)

அதிபர்களுக்கு கேணல் பதவிகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் கல்வி அமைச்சருக்கு இராணுவத்தளபதி பதவி வழங்கப்படுமா? என்று ஐ.தே.கவின் எம்.பியான ரவி கருணாநாயக்க கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஜனநாயக தேசிய கூட்டணியின் எம்.பியான சுனில் ஹந்துன்நெத்தி அதிபர்களுக்கு கேணல் பதவி வழங்கப்படுவது தொடர்பில் கல்வி அமைச்சரிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பிரதி கல்வியமைச்சர் விஜித்தமுனி சொய்சா சிலவற்றை தலைமையேற்று வழிநடத்தும் பொறுப்புகள் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாலே அவர்களை கௌரவிக்கும் வகையில் கேணல் பதவி வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

அப்போது ஒழுங்கு பிரச்சினையை எழுப்பிய ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்க அதிபர்கள் கேணல் என்றால் கல்வி அமைச்சர் என்ன இராணுவத் தளபதியா? அவருக்கு இராணுவத்தளபதி பதவி வழங்கப்படுமா என்று வினவினார்.

இதனால் சபையில் சிரிப்பொலி எழுந்ததுடன் இது ஒழுங்கு பிரச்சினை இல்லையென்று சபாநாயகர் தெரிவித்தார். (அ-2)

## 500 மில்லியன் டொலர்களை கடனாக கோரி இலங்கை உயர்மட்டக்குழு பயணம்

இலங்கைக்கு மேலும் கடன் உதவிகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு இலங்கையிலிருந்த உயர்மட்டக்குழு ஒன்று ஜப்பான் சென்றுள்ளது. ஜப்பானின் டோக்கியோ நகரில் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியன இணைந்து தமது வருடாந்த சந்திப்பை நேற்று தொடங்கியுள்ளனர்.

இதில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர். இதில் அமைச்சர் சரத் அமுனுகம, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் நிதி அமைச்சின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய உயர்மட்ட குழு ஒன்று கலந்து கொள்கிறது.

ஏற்கனவே சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 2.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ள நிலையில் மீண்டும் மேலதிகமாக 500 மில்லியன் டொலர்களை இலங்கை கடனாக கோரியிருந்தது.

இது தொடர்பிலும் இந்த குழு பேச்சுவார்த்தை நடத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கான நிதியை ஜப்பான் அரசாங்கம் அதிகரித்துள்ளது. இதற்காக ஜப்பான் 96 மில்லியன் ரூபாய்களை இலங்கைக்கு வழங்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள மனிதாபிமான உதவி நிறுவனங்களின் ஊடாக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளுக்காக நிதி வழங்கும் முக்கிய நாடுகளில் ஒன்றாக ஜப்பான் காணப்படுகிறது.

கடந்த 2003 ஆம் ஆண்டில் இருந்த ஜப்பான் அரசாங்கம் சுமார் 3 பில்லியன் ரூபாய்களை வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளுக்காக வழங்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)



யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில் மாணவர்கள் விளையாட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு விளையாட்டு மைதானம் சீரற்ற நிலையில் காணப்படுகின்றது. இவ்விளையாட்டு மைதானத்தினை லெப்டினன்ட் கேணல் கமாண்டிங் 18 ஆவது அதிகாரிகள் மற்றும் இராணுவ வீரர்கள் இணைந்து துப்பரவு பணியில் ஈடுபட்டதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய மத்திய அரசு கடந்த போரில் வீடிழந்த ஈழத்தமிழர்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தை சில வருடங்களுக்கு முன்பு அறிமுகம் செய்தது. ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்ட நிலையில் ஒரு தொய்வு ஏற்பட்டது.

இல்லை என்று அவர் பதில் கூறினார். விரல் நுனியில் தகவல்களை வைத்திருந்தால் அந்த ஊடகவியலாளர்கள், பசில் ராஜபக்சவின் அபட்டமான பொய்யை உடைத்திருக்க முடியும்.

1987 இந்தியப் படைகள் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்தபோது

அக்கரைவெளி, இலங்கை முனை, கரையாம்முனை, ஈச்சங்காடு ஆகியன சிங்களக் கிராமங்களாகப் பெயர் மாற்றப்பட்டுள்ளன.

வெலிஓயா குடியேற்றத்தின் மூலம் 3ஆயிரத்து 500 ஏக்கர்



# யார் என்ன செய்தாலும் சிங்கள குடியேற்றம் தொடரட்டும்

திட்டம் நிறைவேற்றப்படுமோ என்ற ஐயம் எழுந்தது.

திடீர் என்று இந்த மாதம் (ஒக்டோபர் 2012) முதலாம் திகதி 43 ஆயிரம் வீடுகள் கட்டும் திட்டத்தை இந்திய அரசு தொடங்கி வைத்தது. இந்த வைபவத்திற்கு ஒரு பட்டாளம் இந்திய பத்திரிகை



யாளர்களும் தொலைக்காட்சி நிருபர்களும் இலங்கை தலைநகர் கொழும்புக்கு படையெடுத்தனர்.

இலங்கை பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் இந்திய- இலங்கை அரசுகளுக்கிடையில் தொடர்பாளராக இருப்பவருமான ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இளவல் பசில் ராஜபக்ச இந்திய ஊடகத் துறையினரின் கேள்விகளுக்கு பதில் கூறினார். கேள்விகள் சரமாரியாகக் கேட்கப்பட்டாலும் அமைச்சர் பசில் மிகவும் இலாவகமாக மழுப்பிப் பதில் கூறினார்.

தமிழர் தாயகமான வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மொத்த நிலப்பரப்பு 20,369.1 சதுர கிலோ மீற்றர் 2008-2009 ஆம் ஆண்டளவில் சிங்களக் குடியேற்றத்தின் மூலம் 6.500 க்கும் மேற்பட்ட சதுர கிலோ மீற்றர் பறிபோய்விட்டது. சிங்களக் குடியேற்றம் இன்றுவரை தொடர்கிறது.

தமிழர்கள் பெரும்பான்மையாக

நன்றி: இணையம்

வாழ்ந்த அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை என்பன சிங்கள மயமாக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் சிறுபான்மையாகியுள்ளனர். "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" என்று சொல்வார்களே அதுபோல் சிங்களக்குடியேற்றம் தொடர்ச்சியாக நடைபெறுகிறது.

ஒரு இந்திய ஊடகவியலாளர், பசில் ராஜபக்சவை இது தொடர்பாக கேட்டதற்கு அப்படியொன்றும்

இந்திய அரசின் ஒப்புதலோடு மணலாறு குடியேற்றம் மிகத் தீவிரமாக நடத்தப்பட்டது. அங்கிருந்து விரட்டப்பட்ட தமிழர்கள் ராஜீவ்காந்தி அரசிற்கு இதுபற்றி முறைப்பாடு செய்தார்கள். பிரதமர் ராஜீவ் அந்தப் பிராந்தியத்திற்கும் பொறுப்பாகவிருந்த இந்திய இராணுவ அதிகாரியிடம் விளக்கம் கேட்டார்.

கேணல் தர அதிகாரியான அவர் சிங்களக் குடியேற்றம் மணலாற்றில் நடக்கவில்லை என்று அறிக்கை இட்டார். ராஜீவ்காந்தி அரசிற்கு அது போதுமானதாக இருந்தது. இன்றும் அப்படியான நிலவரம் நடக்கிறது. சிங்களக் குடியேற்றம் பற்றிய கேள்வியை இந்திய ஊடகவியலாளர்கள் பசிலிடம் கேட்கிறார்கள். அவர் அப்படியொன்றும் இல்லை என்கிறார். ஊடகவியலாளர் திருப்திப்படுகிறார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் வெளியிட்ட அறிக் கையில் வடக்கு- கிழக்கை இராணுவ ஆக்கிரமிப்புக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதில்

நிலத்தை தமிழர்கள் இழந்துள்ளனர். வடக்கு- கிழக்கு தொடர் நிலப் பரப்பைத் துண்டாடும் ஆப்பாக மணலாறு குடியேற்றம் இடம்பெறு கிறது.

இந்தக் குடியேற்றத்திற்கு புதுடெல்லி அரசு பூரண ஆதரவு வழங்கியுள்ளதை இந்திய ஊடகத்துறையினர் புரிந்து கொள்ள வேண்டும்.

சிங்களக் குடியேற்றம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. பழம்பெரும் தமிழ்க் கிராமங்களான குமுழமுனை, கூழாம்முறிப்பு, தென்னைமரமாவடி, கொக்கிளாய் ஆகியனவற்றில் இப்பொழுது இராணுவ உதவியுடன் சிங்கள அதிகாரிகளினால் சிங்கள மக்கள் குடியேற்றப்படுகின்றனர்.

தமக்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் வரலாற்றுத் தொடர் இருப்பதாக இந்தச் சிங்கள மக்கள் உரிமை கோருகின்றனர். அவர்கள் தமக்கு குடியிருப்பு நிலம், விவசாய நிலம் என்பனவோடு கட்டுமான வசதிகளும் செய்து தரவேண்டும் என்று இராணுவத்திடம் மனுச் செய்துள்ளனர். இதை தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடமாடும் இந்திய ஊடகவியலாளர்கள் உலகிற்கு அறிவிக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்

பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எஸ்.சிறிதரன் ஆகியோர் ஜனவரி 13 ஆம் திகதி கொக்குளாய் பிரதேசத்தின் அமை யன்குளம், உத்தராயன்குளம், அடை யக்காறுத்தான்குளம், புவாமடுக்கண்டல், இரிஞ்சிக்காடு, நாய்க் கடிச்ச முறிப்பு, தட்டமாலை, சக்காலத்துவெளி, சவாந்தாமுறிப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இடம்பெயர்ந்த தமிழ் மக்களைச் சந்தித்துள்ளனர்.

இந்தக்கிராமங்களில் தமிழர்கள் மீள்குடியேறுவதை இராணுவம் தடைசெய்துள்ளது. இலங்கை அரசு சிங்கள மக்களை இந்தக் கிராமங் களில் குடியேற்றுவதற்கு இரண்டு வருடத் திட்டத்தை வகுத்துள்ளது. ஏறத்தாழ 2 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் இந்த வகையில் பறிபோகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கூறிய சிங்களக் குடியேற்றத்திட்டம் பற்றி இந்திய மத்திய அரசிற்கு முறைப்பாடு செய்துள்ளனர். செவி

# இலங்கை அரசின் நினைப்பு இது...

இலங்கை அரசு தீவிரமாக இருக்கிறது. கிளிநொச்சி மாவட்டம் திருமுருகண்டியில் 4 ஆயிரம் ஏக்கருக்கும் கூடுதலான நிலத்தில் சீன உதவியுடன் இராணுவக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டம் முள்ளிக்குளத்தில் கடற்படை முகாம் ஏற்படுத்தப்பட்டு கடற்படையினரின் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சீன அரசாங்கம் நூறுமில்லியன் அமெரிக்கா டொலரை இலங்கை அரசிற்கு உதவித் தொகையாக வழங்கி வடக்கு- கிழக்கில் இராணுவக் கட்டுமானங்களை அமைகிறது.

இராணுவக் குடியிருப்புகளை உருவாக்குவது மூலமாகவும் சிங்களக் குடியேற்றங்கள் மூலமாகவும் வடக்கு- கிழக்கு குடிசனப் பரம்பரை மாற்றிப் பெரும்பான்மையாக வாழும் தமிழர்களைச் சொந்த இடத்தில் சிறுபான்மையாக்கும் முயற்சி நடக்கிறது.

மணலாறு என்ற தமிழர் நிலம் இப்போது வெலிஓயா என்ற பெயருடன் தனிச் சிங்கள பிரதேச செயலகமாக மாற்றப்பட்டுள்ளது. இது இப்போது அனுராதபுரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 1980 களில் தொடங்கப்பட்ட மணலாறுக் குடியேற்றத்தின் மூலம் தமிழர்கள் சொந்த சின்னக்குளம், முந்திரிகைக்குளம்,

சிங்களவர்களுக்கு கோறாளைப்பற்று வடக்கிலுள்ள ஓமடியாமடு கிராமத்தில் நிலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் வாழும் தமிழர்களை உடனடியாக வெளியேறும்படி சிங்களக் குடியேறிகளும் இராணுவத்தினரும் பணித்துள்ளனர். 2007 ஆம் ஆண்டிற்குப்பிறகு மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் வேகமடைந்துள்ளது.

வன்னி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 1760 தமிழ்க் குடும்பங்கள், அம்பலவன் பொக்கணை, தேவிபுரம், ஆனந்தபுரம், மந்துவில், மாத்தளவன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களைச் சொந்த இடங்களில் குடியேற்றாமல் கோம்பாவில் காட்டுப் பகுதியில் தண்ணீர் வசதியற்ற தூர இடங்களில் குடியேற்றப்படுகின்றனர். இதே மாதிரி இரணைப்பாலை மக்களும் சொந்த இடங்களில் அல்லாமல் காட்டுப்பகுதிகளில் கூடார குடியிருப்புக்களில் அமர்த்தப் பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டணியின்

டன் காதில் ஊதியசங்குபோல் அதன்மூலம் ஒரு பலனும் கிடைக்கவில்லை. நாய் குரைத்தாலும் தேர்



தொடர்ந்து நகரும் என்று சொல்வார்கள். ஈழத் தமிழினத்தின் பாரம்பரிய பூமியைச் சிங்கள மயமாக்கும் திட்டம் 1948 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. எவர் விமர்சனம் செய்தாலும் யார் முறைப்பாடு செய்தாலும் பரவாயில்லை குடியேற்றம் தொடரட்டும் என்ற அடிப்படையில் இலங்கை அரசு செயற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரிய நாட்டு பிரஜைகளின் சடலங்கள் சொந்த நாட்டிற்கு

(கொழும்பு)

அப்புத்தளை பகுதியில் மின்னல் தாக்குதலுக்குள்ளாகி இறந்த கொரிய நாட்டு பிரஜைகள் இருவரினதும் சடலங்களை அவர்களின் சொந்த நாட்டிற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் இலங்கை வந்திருக்கும் அவர்களது உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மின்னல் தாக்கி உயிரிழந்த கொரிய நாட்டு பிரஜைகளின் குடும்பத்தவர்கள் கடந்த திங்கட்கிழமை கொழும்பை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் வந்திறங்கியதுடன் தமது உறவினர்களது சடலங்களை சென்று பார்வையிட்டனர்.

கிம் யங் வூ ஜாங், மூன் ஜியோங் ஆகியோர் அப்புத்தளை பகுதியில் கடந்த சனிக்கிழமை மின்னல் தாக்குதலுக்குள்ளாகினர்.

இவர்கள் இருவரும் கொரிய சர்வதேச கூட்டுறவு முகவரகம் என்னும் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள்.

அப்புத்தளையிலுள்ள தமது சக தொண்டரொருவரைப் பார்க்கச் சென்ற போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டது. இந்நிறுவனம் சடலங்களை கொரியாவுக்கு கொண்டு செல்வதற்காக ஆயத்தங்களை செய்து வருகின்றது. (அ-2)

# தேசிய பாடசாலைகளுக்கு அனுமதிபெற 'ஏ' படிவத்தினை பூர்த்தி செய்ய வேண்டும்

(கொழும்பு)

இவ்வாண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களும் பிரபல தேசிய பாடசாலைகளுக்கு அனுமதி பெறுவதற்கு கல்வி அமைச்சினுடைய 'ஏ' படிவத்தினைப் பூர்த்தி செய்து அவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பாடசாலை அதிபர் ஊடாக கல்வி அமைச்சு, இசுறுபாயவிற்கு அனுப்புதல் வேண்டும் என இணைப்பாளர் பி.என். சுதர்சன் அறிவித்துள்ளார். இவ்வாறு அனுப்புவதன் மூலம் கல்வி அமைச்சினால் அவ்வப் பாடசாலைக்குரிய வெட்டுப்புள்ளிகள் தீர்மானிக்கப்பட்டு மாணவர்களுடைய பட்டியல் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட பின்னரே அனுமதிகள் வழங்கப்படும்.

சில தேசிய பாடசாலைகள் சுற்றுநிருபத்தினை மீறி படிவங்களை வழங்குவதாக வடமாகாண கல்வி அபிவிருத்திக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஆகவே கல்வி அமைச்சு சுற்றுநிருபத்தின்படி தரம் 6 இற்குரிய அனுமதிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படும்.

அதேவேளை, எக்காரணம் கொண்டும், மாணவர்களிடம் அனுமதிக்காக நிதி வசூலித்தல் மற்றும் அன்பளிப்பு பெறுதல் ஆகியவை தவிர்க்கப்படுதல் வேண்டும். மேலும் இவ்வகை சார் செயற்பாடுகளுக்கு பாடசாலை அதிபர்களே முழுப்பொறுப்பும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (அ)

# கலை, கலாசார நிகழ்வுகள் நல்ல சமுதாயத்தை உருவாக்கும்

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

(பூந்தோட்டம்)

எமது வாழ்க்கை கலையும் கலாசாரமும் பண்பாடுகளும் இணைந்து தனித்திறன் மிக்கதாக அமைந்துள்ளது என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்திய சீலன் தெரிவித்தார்.

வவுனியா நிருத்திய நிகேதன நுண் கலைக் கல்லூரியின் 18 ஆவது ஆண்டு விழா கல்லூரியின் அதிபர் சூரியாழினி வீரசிங்கத்தின் நெறிப்படுத்தலில் கலாநிதி சுந்தையா சிறி கணேசன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகர கலாசார மண்டபத்தில் இடம்பெற்றபோது பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாங்கள் எங்களது பண்பாட்டை கலாசாரத்தை வளர்த்தெடுக்க வேண்டுமாக இருந்தால் எமது பிள்ளைகளை அவர்களது காலப் பகுதியிலே கலை நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்தி அவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்க வேண்டும். எமது பிள்ளைகளுக்கு அவர்களது வாழ்க்கை நல்ல முறையில் அமைய வேண்டுமாக இருந்தால் அவர்களை கல்வி அறிவுடையவர்களாக ஆக்க வேண்டும். அதே வேளை கலாசாரத்தையும் பண்பாட்டையும் விழுமியங்களையும் பாதுகாக்கின்றவர்களாக அதனூடாக அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்பது பிரதானமானது.

அறிவும் ஒழுக்கமும் எமது இரண்டு கண்களை போன்றன. அந்த இரண்டு கண்களையும் பேணி பாதுகாக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் எமது மாணவ செல்வங்களுக்கு சரியான பாதையினை காட்ட வேண்டும். கல்வி என்பது இன்று சவால் நிறைந்ததாக மாறியிருக்கின்றது.

எமது பிள்ளைகளை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் சவால்களை சமாளிக்கக்கூடியவர்களாக உருவாக்க வேண்டும். ஆங் கில கல்வி, கணனிக்கல்வி என்பவற்றை எமது பிள்ளைகளுக்கு நாம் வழங்க வேண்டும்.

நவீன யுகத்தில் அவர்கள் தலை நிமிர்ந்து நிற்க கூடியவர்களாக உருவாக்க வேண்டும். எமது பிள்ளைகள் விலைமதிக்க முடியாத சொத்துக்கள். ஒக்டோபர் முதலாம் திகதி சிறுவர் தினத்தையும் ஒக்டோபர் 6 ஆம் திகதி ஆசிரியர் தினத்தையும் கொண்டாடினோம். எங்களது சமூகத்திலே அவர்கள் மதிக்கப்பட வேண்டும், கௌரவிக்கப்படவேண்டும். பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும்.எமது பிள்ளைகளை சரியான விதத்தில் உருவாக்க வேண்டும். இன்றைய உலகத்தில் உள்ள விடயங்களை சொல்லித் கொடுத்து தீய வழிகளில் இருந்து அவர்கள் விலத்திச் செல்ல ஆலோசனைகளை வழங்க வேண்டும்.


ஆசிரியர்களை, பெற்றோர்களை, முதியவர்களை மதிப்பதற்கான உயரிய பண்புகளை வளர்த்துக் கொடுக்க வேண்டும். அதன் மூலமாகவே ஒழுக்கமுடைய பண்பாடுடைய, கல்வி அறிவுடைய சமூகத்தை உருவாக்க முடியும் என தெரிவித்தார். (அ-9-266)

# தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.இதற்கமைய பாடசாலையில் சித்தி அடைந்த மாணவர்களின் விபரங்கள் அப் பாடசாலை அதிபர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விபரங்கள் வருமாறு,

**யா/திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்** (அ.யூட் அலன்ராஜ்-173), **யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்** (சிவகுமாரன் துளசிகா-163, முகுந்தன் லம்போதரன்-161, ரங்கநாதன் கிருஸ்ணராஜா- 153, ஞானமூர்த்தி சூரியா-150). (அ)



இராணுவத்தின் 63 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு சி.ஆர்.அன்ட் எப்.சி. மைதானத்தில் நேற்று இராணுவ அணிவகுப்பு மரியாதை நிகழ்வொன்று இடம்பெற்றது. இராணுவ தளபதி லெப்டினன் ஜெயரல் ஜகத் ஜயசூரிய மேற்படி அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

# நீர்மின் உற்பத்தி நிலையம் அமைக்க குவைத் நிதியுதவி

(கொழும்பு)

மின்சார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் கண்டி, மொரகொல்ல பகுதியில் 30 மெகாவோர்ட் நீர்மின் உற்பத்தி நிலையமொன்றை நிர்மாணிக்க மின்சக்தி எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் மின்சார சபை உயரதிகாரிகளுக்கும் ஜப்பான் நிபொன்கொய் தனியார் கம்பனி அதிகாரிகளுக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

மொரகொல்ல நீர்மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான அறிக்கை தயாரிக்கும் பணி 2009 இல் ஆரம்பிக்கப்பட்டு இந்த வருடம் நிறைவு செய்யப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு குவைத் 25 ஆயிரம் குவைத் தினார்களை வழங்க உள்ளதோடு ஆசிய அபிவிருத்தி வங்கி 6 மில்லியன் டொலர்களை வழங்குகிறது.

எதிர்வரும் 15 மாத காலத்தினுள் இதற்கான ஆரம்பகட்ட பணிகள் நிறைவு செய்யப்படவுள்ளது. மகாவலி கங்கைக்கு குறுக்கே அணைகட்டி மொரகொல்ல நீர்தேக்கம் நிர்மாணிக்கப்படவுள்ளதோடு அங்கிருந்து 3 கிலோ மீற்றர் நீள சுரங்கப்பாதையூடாக நீர் எடுத்துச் செல்லப்படவுள்ளது.

மொரகொல்ல மின்சாரத் திட்டத்தினூடாக வருடாந்தம் 85 ஜிகாவோர்ட் உற்பத்தி செய்யப் படவுள்ளது.இலங்கையிலுள்ள நீர்த்தேக்கங்கள் வரண்டுள்ள நிலையில் இலங்கையின் உச்ச மின் உற்பத்தி 3 ஆயிரத்து 291 மெகாவோ ர்ட்டாக குறைவடைந்துள்ளது.

மின்சார கட்டமைப்பை செயற்றிறன் மிக்கதாக முன்னெடுக்க நீர் மின்சாரம் இன்றியமையாததாக உள்ளது. இந்த நிலையிலே புதிதாக நீர்மின் உற்பத்தி நிலையமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சுக்கு 437 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

2013 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவினால் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் '2013 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த செலவீனம் ஆயிரத்து 335 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ இருந்து பெறும் கடன் தொகை ஆயிரத்து 295 பில்லியன் ரூபாவை தாண்டக்கூடாது எனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு சட்டமூலத்தின் பிரகாரம் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிற்கு கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சுக்காக 289, 502 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நிதி, திட்ட அமுலாக்கல் அமைச்சிற்கு 87 ஆயிரத்து 467 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு 88 ஆயிரத்து 900 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சிற்கு 93 ஆயிரத்து 522 மில்லியன் ரூபாவும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு 127, 885 மில்லியன் ரூபாவும் அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. ஜனாதிபதிக்கு 13, 526 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதமரின் அலுவலகம், நீதிபதிகள், பாராளுமன்றம், எதிர்க்கட்சி தலைவர் ஆகியோருக்கான நிதி ஒதுக்கீடும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தகவல் அமைச்சிற்கு 2, 718 மில்லியன் ரூபாவும் கல்வி அமைச்சிற்கு 37, 925 மில்லியன் ரூபாவும் உயர்கல்வி அமைச்சிற்கு 27, 900 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள நிலையிலும் மீள் குடியேற்ற அமைச்சிற்கு 437 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாட்டின் வீதிக்கட்டமைப்பு, பாலம் என்பன அமைப்பதற்காகவும் இம்முறை கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி துறைமுக நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு 131, 614 மில்லியன் ரூபா ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு 447 மில்லியன் ரூபாவும் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு 150 மில்லியன் ரூபாவும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு 156.1 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு 160.8 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வரவு செலவுத்திட்டம் நவம்பர் மாதம் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# சிறுவர் அரங்கம்

246

## வாயாடியைத் திருத்த

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அந் நாட்டு அரசகுரு வாயாடியாக இருந்தார்.

நாள்தோறும் அவர் அரசவைக்கு வருவார். யாரையும் அவர் பேசவிடமாட்டார். யார் பேச்சையும் கேட்கவும் மாட்டார். அவரே தொணதொண வென்று ஓயாமல் பேசிக் கொண்டிருப்பார்.

இதனால் எரிச்சல் அடைந் தான் அரசன்.

எப்படி அரச குருவின் வாயை அடைப்பது? அவர் பேச்சை நிறுத்துவது என்று சிந்தித்தபடி இருந்தான்.

அவனுக்கு வழியேதும் தெரியவில்லை.

தலைநகரத்திற்கு வெளியே ஒருதோப்பு இருந்தது. அங்கே ஒரு மரத்தின் நிழலில் கால் இல்லாத சிறுவன் இருந்தான்.

அவன் கையில் கவண் கல் இருந்தது. அவனைச் சூழ்ந்து நிறையச் சிறுவர்கள் இருந் தார்கள்.

சிறுவர்களில் ஒருவன் மரத்தில் ஓர் இலையைக் காட் டினான். அந்த இலையில் குதிரை செய்து காட்டு என்றான்.

கால்கள் இல்லாதவன் கவண் கல்லை எடுத்தான். அந்த இலைக்குக் குறி வைத்தான்.

கவண் கல் அந்த இலையைத் துளைத்துக் குதிரை போலாக் கியது. அந்த இலையும் கீழே விழுந்தது.

இதைப்பார்த்த சிறுவர்கள் ஆரவாரம் செய்தார்கள். இன் னொரு சிறுவன் ஓர் இலை யைக்காட்டினான். அதில் யானை செய்துதா என்றான்.

கால்கள் இல்லாத சிறுவன் கவண்கல்லை வீசினான். இலையைத் துளைத்த அது யானைபோல வடிவம் செய் தது. அந்த இலையும் கீழே விழுந்தது.

இப்படியே கவண் கல்லால் நிறைய வடிவங்கள் செய்தான் அவன்.

அந்த வழியாகக் குதிரை யில் அரசன் வந்தான்.

சிறுவர்களின் ஆரவாரம் அவனை ஈர்த்தது. சிறுவர்க ளின் அருகே வந்தான். அரச னைக் கண்ட சிறுவர்கள் ஓட் டம் பிடித்தார்கள்.

கால்கள் இல்லாத சிறுவ னால் ஓடமுடியவில்லை. நடுங்கியபடியே இருந்தான்.

கீழே கிடந்த இலைகளைப் பார்த்தான் அரசன். ஒவ்வொ ன்றிலும் யானை, குதிரை போன்ற வடிவங்கள் இருந் தன். இவற்றைப்பார்த்து வியப் படைந்தான்.

நடுங்கிக்கொண்டிருந்த சிறு வனிடம் அஞ்சவேண்டாம். இந்த இலைகளில் இப்படிப் பட்ட வடிவங்களைச் செய்தது யார்? ஏன்று கேட்டான்.

அரசே நான்தான் இப்படிச் செய்தேன் என்று நடந்ததைச் சொன்னான் அவன்.

இந்தச்சிறுவனுக்கு இப் படிப்பட்ட ஆற்றலா? கவண் கல்லால் விந்தைகள் செய்கி றானே என்று நினைத்தான் அரசன்.

அரசகுருவைத் திருத்த இவனிடம் வழி கேட்போம் என்று நினைத்தான்.

சிறுவனே எங்கள் அரசகுரு வாயாடியாக இருக்கிறார். அரசவையில் தொணதொண வென்று பேசுகிறார். யாரை யும் பேசவிடுவதில்லை. அவர் பேசாமல் இருந்தால் நன்றாக இருக்கும். அவர் வாயை அடைக்க ஏதேனும் வழியுள் ளதா? என்று கேட்டான்.

சிந்தனையில் ஆழ்ந்த அவன் அரசே! நான் சொல்வது போலச் செய்யுங்கள். அரசகுரு வின் வாயை அடைத்து விட லாம். நல்லறிவுபெறும் அவர் அதன்பின்பு அளவாகத்தான் பேசுவார் என்றான்.

என்ன வழி சொல்? என்று அர் வத்துடன் கேட்டான் அரசன்.

அரசே காய்ந்த வெள்ளாட் டுப் புழுக்கைகள் கிண்ணம் நிறையவேண்டும். அந்தப் புழுக் கையை வைத்து ஊதுவது போலக் குழல் ஒன்று வேண்டும்.

அரசகுருவின் எதிரில் திரைச் சீலை ஒன்றைக்கட்ட வேண்டும்.

அந்தத் திரைச்சீலைக்குப் பின் நான் ஒளிந்துகொள்வேன். நான் இருப்பது யாருக்கும் தெரியக்கூடாது என்று தன் திட் டத்தை விரிவாகச் சொன்னான் அவன்.

அதுபோலவே அரசன் செய்து முடித்தான்.

திரைச்சீலை மறைவில் இருந் தான் சிறுவன். வழக்கம்போல



அரசகுரு பேச வாயைத் திறந்தார்.

குழலின் ஒரு முனையில் ஆட்டுப்புழுக்கையை வைத் தான் சிறுவன். திறந்திருந்த அவர் வாயில் விழுமாறு ஊதினான். அவன் குறி தவறவில்லை.

ஏதோ சிறு உருண்டை வாயில் விழுந்ததை அறிந்தார் அவர். துப்பினால் பேச்சுத் தடைப் படுமே என்று நினைத்தார்.

கெட்ட நாற்றம் வீசிய அதை அப்படியே விழுங்கினார். பேசிக் கொண்டே இருந்தார்.

அவர் பேச்சை நிறுத்தாததை அறிந்தான் சிறுவன். தொட ர்ந்து அவர் வாயில் ஆட்டுப் புழுக்கைகளைப் போட்டுக் கொண்டேயிருந்தான்.

தொடர்ந்து வாயில் ஏதோ விழுகிறது என்பதை அறிந் தார் அவர்.

அப்பொழுதும் அவர் பேச்சை நிறுத்தவில்லை. அவற்றை விழுங்கியபடியே பேசிக்கொண்டிருந்தார்.

உள்ளே சென்ற புழுக்கை கள் அவர் வயிற்றைக் கலக் கத் தொடங்கின. வயிற்றைப் பிடித்தபடியே அவர் தொட ர்ந்து பேசிக்கொண்டிருந்தார்.

இதைப்பார்த்த அரசனால் சிரிப்பை அடக்கமுடியவி ல்லை.

அரசகுருவே! ஆட்டுப் புழுக்கைகளை ஏராளமாக விழுங்கிவிட்டீர். இருந்தும் நீங்கள் பேச்சை நிறுத்த வில்லை.

உடனே வீட்டுக்குச் செல் லுங்கள். பேதி மருந்து சாப் பிடுங்கள். உடல் நலமான பின்பு இங்கு வந்து பேசுங் கள் என்றான்.

அரசவையில் இருந்த எல் லோரும் இதைக்கேட்டுச் சிரித்தார்கள்.

உண்மையை அறிந்த அரச குரு வயிற்றுவலியால் துடித் தார். வீட்டிற்குச் சென்ற அவர் மருந்து சாப்பிட்டார்.

இரண்டு நாட்களில் அவர் உடல்நிலை தேறியது.

அந்தச்சிறுவனுக்கு நிறை யப் பரிசுகள் தந்தான் அரசன்.

அதிகம் பேசியதால்தானே இத்தகைய அவமானம் நேர்ந்தது. எல்லோரும் சிரிக்கும் படி நேர்ந்தது இனிமேல் தேவை யானால் மட்டும் பேசுவது. அதுவும் அளவாகப் பேசு வது என்ற முடிவுக்கு வந்தார் அரசகுரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் தாதியர் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

மாகாண அடிப்படையிலான தாதிய ஆட்சேர்ப்பை உடன் நிறுத்தக்கோரியும் யாழ். போதனா வைத்தியசாலையில் 5 வருடங்களுக்கும் மேலாக தாதியர்களுக்கான விடுதியமைத்து தரப்படாததைக் கண்டித்தும் மேலதிக கொடுப்பனவு உட்பட பல கோரிக்கைகளை முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலை தாதியர்கள் ஒரு மணிநேர கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டம் நாட்டின் சகல பிரதேசங்களிலும் இடம்பெற்றதோடு ஒரே கோரிக்கைகளைக் கொண்டதாகவே இப் போராட்டம் அமைந்தது.

இப்போராட்டத்தின் கோரிக்கைகளாக பெரும்பான்மையினரின் மௌனத்தால் தாதியச் சேவைக்கு கிடைக்க வேண்டிய பல உரிமைகள் கிடைக்காமல் போயுள்ளன.

தாதிய உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு மணித்தியாலத்திற்கு 65 ரூபா, வைத்திய உத்தியோகஸ்தர்களுக்கு மணித்தியாலயத்திற்கு 300 ரூபா, தனியார் மருத்துவமனையில் தாதிய உத்தியோகத்தர்களுக்கு மணிக்கு 175 ரூபா வழங்குகின்றனர். மேலதிக நேரக் கொடுப்பனவை அதிகரிக்கும்படி நாம் கோரும் போது ஆணையகம் அதனை அனுமதித்தது. எனினும் நிதி அமைச்சு அதற்கான அனுமதியை வழங்க மறுத்துள்ளது.

- வகுப்பு I உயர்வு 12 வருடத்தில் வழங்கப்பட்டு 2011 இல் நடைமுறைப்படுத்தப்பட்டதனால் பரிபூரக சேவைக்கு 2 இலட்சம் வரையான நிலுவைச் சம்பளம் உரித்தானது. தாதியர் சேவையின் வகுப்பு I 1988 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி நடைமுறைப்படுத்துமாறு செய்யப்பட்ட கோரிக்கைக்கு இன்னமும் அமைச்சுக் குழு அனுமதி வழங்கவில்லை. நிலுவைச் சம்பளம் கிடைக்காமல் போனது.
- தாதிய சேவைக்கு தற்கால கடமைகள் அடங்கிய முறையான கடமைகள் பட்டியல் ஒன்று இல்லை. 20 வருடங்கள் பழைமை வாய்ந்த பட்டியலே காணப்படுகின்றது.
- பட்டப்படிப்பை முடித்து 2 வருடங்கள் கடந்த போதிலும் பட்டதாரி தாதியர்களை இன்னமும் சேவையில் இணைத்துக் கொள்ளவில்லை.
- வைத்தியர் ஒருவர் தலைவர் பதவி வகிக்கும் ஒரே தாதியர் சங்கம் இலங்கையர் தாதியர் சங்கமாகும். பட்டதாரி தாதியர்களுக்கு இந்தச் சங்கத்தில் பதிவளிக்கப்படுவது கூட இல்லை.
- 6 மாத கால தாதி மனநலப் பயிற்சியினை செல்லுபடியற்றதாக்கி 2 மாத குறுகிய தாதி மன்றப் பயிற்சியொன்றினை தாதி உத்தியோகத்தர்களுக்கு பெற்றுத் தரும் சூழ்ச்சியொன்று நடைபெறுகின்றது உட்பட தொலைபேசி கொடுப்பனவு, இடமாற்றங்கள், 5 நாட்கள் கொண்ட வேலை நாட்கள், தாதியர் சட்டத்தினை மீளத்திருத்தியமைத்தல், தாதிய பின்படிப்பு கல்லூரியினை தேசிய தாதிக் கல்வி நிறுவனமாக உயர்த்தி பட்டப்படிப்பினை வழங்குதல் போன்ற 25 கோரிக்கைகளினை நடைமுறைப்படுத்த கோரியே அரச தாதி உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் யாழ். போதனா வைத்தியசாலையில் நீண்டகாலமாக நிலவும் தாதிய பற்றாக்குறை, விடுதி வசதியின்மையினையும் தாம் கண்டிப்பதாக யாழ். அரச தாதி உத்தியோகத்தர் சங்க செயலாளர் பி.வி. சிவயோகன் தெரிவித்தார்.

இவ் ஆர்ப்பாட்டம் மதியம் 12 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் ஒரு மணியளவில் நிறைவுற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அரச தாதியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4-24)

## சர்வதேச பெண்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

ur friend foundation மற்றும் சிறு வர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு இணைந்து நடத்தும் சர்வதேச பெண் பிள்ளைகள் தினம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் சுவட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

## கடும் போக்குடைய புலிகளுக்கு எதிராக விரைவில் வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

கடும் போக்குடைய தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராக விரைவாக வழக்குத் தொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மேலதிக நாயகம் சுகுந்தகாமர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான 60 பேர் இனங்காணப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணை மேற்கொள்ளப்படுவர்களுக்கு இது விதிவிலக்காகும் வகையில் திட்டங்கள் வரையப்பட்டுள்ளன.

300 புலி உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் பாரதூரமாக ஈடுபட்டதற்கான சாட்சிகள் இல்லாத நிலையில் ஏனையவர்கள் புனர்வாழ்வு அழிப்புக்கு உட்படுத்தப்பட்டுள் ளனர்.

இவர்களில் 80 பேருக்கு எதிரான புதிய சாட்சிகளின் அடிப்படையில் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த விசாரணைகளை விரைவுபடுத்துவதற்காக மேலதிக நீதிமன்றங்களை அமைக்கும் பணியில் நீதிமன்ற சேவைகள் ஆணைக் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிலர் இன்னும் தமிழீழ கொள்கைகளை கொண்ட தமிழ் புலம்பெயர்ந்தவர்களு டன் தொடர்பு கொண்டிருக்கின்றீர்களா என்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் மேல திக நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையில் புனர்வாழ்வளிக்கப்பட்ட மேலும் 31 முன்னாள் போராளிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி விடுதலை செய்யப்பட வுள்ளனர். இதன்படி இன்னும் 779 முன்னாள் போராளிகள் எஞ்சியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)


## மனம் நிறைந்த நன்றிகள்



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா



க.கமலேந்திரன் (கமல்)



கி.செல்வராசா(லிங்கேஸ்)

ஆவரங்கால் மேற்கு கிராமத்திற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின்சார இணைப்பு கிடைப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்கு என்றும் மக்கள் சேவையிலுள்ள அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் அவர்களுக்கும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) அவர்களுக்கும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் அச்சுவேலி பிரதேச இணை அமைப்பாளரும் வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினருமாகிய கிருஷ்ணபிள்ளை செல்வராசா (லிங்கேஸ்) அவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். (723)

ஆவரங்கால் மேற்கு வாரணம் வீதி,

அ.அருட்செல்வன், ம.வயிரமுத்து, சி.செல்லத்துரை, கி.இராசரத்தினம்,
[illegible], கி.செல்வராணி, யோ.தவலட்சுமி, செ.சந்தனகுமார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாத சிறுவர்களும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையும்!

பொதுவாக 18 வயதுக்குட்பட்டவர்கள் சிறுவர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவ்வயதுக்குட்பட்டவர்கள் வெள்ளை மனம் படைத்தவர்களாகவும் கள்ளம் கடபமற்றவர்களாகவும் நன்மை, தீமையைப் பகுத்துப் பார்க்க முடியாதவர்களாகவும் விளையாட்டில் ஆர்வம் உள்ளவர்களாகவும் பிறரில் தங்கியிருப்பவர்களாகவும் இனிப்புப் பண்டங்கள், உணவுப் பொருட்களில் ஆர்வம் உள்ளவர்களாகவும் இருப்பவர்கள் இவ்வாறான குணவியல்புள்ள சிறுவர்கள் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் உரிய வளர்ச்சிப் பருவத்தில் முறையாக வளர்ச்சியடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஐக்கிய நாடுகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறுவர் உரிமைகள் பிரகடனம் 1989 இல் உருவாக்கப்பட்டுள்ளது. இப் பிரகடனத்தை பெரும்பாலான நாடுகள் ஏற்றுக் கொண்டு சிறுவர்களின் உயரிய நலன் பேணுவதற்காக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில் எமது நாடும் இதற்கு விதி விலக்கல்லாது செயற்படுகின்றது என்பது வெளிப்படை.

இச் சிறுவர் உரிமை சமவாயத்தின் அத்தியாயம் பிள்ளைகளுக்கான தனித்துவ அடையாளம் பேணவும் பிறப்பு முதல் பெயர் ஒன்றைத் தாங்கியிருக்கவும் இனம் ஒன்றைச் சார்ந்திருக்கவும் உள்ள உரிமை ஒவ்வொரு சிறுவர்களுக்கும் உண்டு என விளக்குகின்றது. அத்துடன் 8 ஆம் அத்தியாயம் சிறுவர்களது தனித்துவ அடையாளத்தைப் பாதுகாத்தல் எனும் பொருளில் பிள்ளைகளில் தனித்துவ அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் அது இல்லாமற் சென்றவிடத்து மீளவும் அதனை நிலை நிறுத்துவதற்குமான கடப்பாடு அரசாங்கத்திற்கு உண்டு எனும் கருத்தினை விளக்குகின்றது. இவற்றினடிப்படையில் ஒரு பிள்ளை பிறந்தவுடன் இப்பிள்ளையின் அனைத்து விபரங்களுடன் பிறப்பை பதிவு செய்தல் வேண்டும் என்று தெளிவாக புலப்படுத்துகின்றது.

சிறுவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் என்பது அவர்களது பெயரை தாய் தந்தையின் பெயருடன் இணைத்துப் பிறந்த இடம், இனம் போன்றவற்றை வெளிப்படுத்தும் ஒரு அடிப்படை சட்டபூர்வ ஆவணமாகும். ஒரு குழந்தை பிறந்தவுடன் அப்பிறப்பிற்கு அடையாளமான முதல்முறையாக பதிவு செய்யும் அரச ஆவணமாகவும் இது விளங்குகின்றது. இந்நிலையில் இம்முக்கியமானதும் முதன்மையானதுமான ஆவணத்தினைப் பெற்றுக் கொடுப்பது பெற்றோர், பெரியோர், அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பும் கடமையுமாகும்.

சிறுவர்களுக்கு இவ் ஆவணமானது பிறப்பு முதல் ஒவ்வொரு வளர்ச்சிப் படிக்கும் தேவையானது.

இதன் முக்கியத்துவமாக

- ✹ ஒரு பிள்ளையின் பிறப்பை உறுதிப்படுத்துவது
- ✹ பிள்ளை பாடசாலையில் இணைவதற்கு
- ✹ பரீட்சைக்குத் தோற்றுவதற்கு
- ✹ தேசிய அடையாள அட்டையை பெறுவதற்கு
- ✹ வேலை ஒன்றைப் பெறுவதற்கு
- ✹ தமக்கான வங்கிக் கணக்கினை ஆரம்பிப்பதற்கு
- ✹ கடவுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு
- ✹ திருமணம் செய்வதற்கு வயதை உறுதிப்படுத்த

இவ் ஆவணம் அவசியமாகின்றது. இவ்வாறான ஒவ்வொரு தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்வதற்கு வேண்டப்படும் முதன்மைப்பத்திரம் இதுவாகும். இருப்பினும் இன்றைய நிலையில் இவ் ஆவணம் இவ்வாறு ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் சிக்கல்படும் சிறுவர்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான ஆவணத்தை ஒரு பிள்ளைக்கு பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான ஆவணங்களாக (3 மாதத்திற்குள்)

- ✹ வைத்தியசாலையில் அல்லது வீட்டில் பிறந்திருந்தால் அவற்றை உறுதிப்படுத்திய மருத்துவ மாதுவின் கிராம அலுவலரின் கடிதம், பெற்றோரின் திருமண சான்றிதழ், பெற்றோரின் பிறப்பு சான்றிதழ்கள்
- ✹ பிறப்பு நிகழ்ந்து உடனே பதிவை மேற்கொள்ளாது காலங்கடந்த பதிவை மேற்கொள்ள வேண்டுமாயின் (3 மாத காலத்தின் பின்)

மேற்கூறப்பட்ட ஆவணங்களுடன் மாவட்டப் பதிவாளரின் அனுமதியுடன் பிறப்புப் பதிவை பெற்றுக் கொள்ளலாம். ஒரு வருடத்திற்கு மேலும் பிறப்புப் பதிவு மேற்கொள்ளப்படவில்லையெனில் மேற்கூறப்பட்ட ஆவணங்களுடன் உதவிப் பதிவாளர் நாயகத்தின் அனுமதியுடன் இவர்களுக்கு பிறப்புப் பதிவு ஆவணத்தினைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

'இவ்வாறான வசதி வாய்ப்புக்களுடன் பிள்ளைகளுக்கு பிறப்புப் பத்திரத்தை பெற்றுக் கொடுக்க பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள், போதிய வளங்களுடன் இவர்களுக்கான உதவியை வழங்கி வருகின்றன.

இவ்வாறான வசதிகள் வழங்கப்பட்டு இருப்பினும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக் கொள்ள முடியாமல் சிக்கல்படும் சிறுவர்களும் உண்டு. இவ்வாறான சிக்கல்களுக்கான காரணமாக,

- ✹ பெற்றோரின் அக்கறையின்மை
- ✹ இவ் ஆவணத்தின் முக்கியத்துவம் பற்றிய தெளிவின்மை
- ✹ காலம் தாழ்த்திப் பதியலாம் எனப் பொறுப்பற்று இருப்பது
- ✹ நாட்டுப் பிரச்சினைகள், இடப்பெயர்வுகள் காரணமாக பதிவுகள் மேற்கொள்ளப்படாமை
- ✹ உரிய ஆவணங்களைத் தவற விட்டமை சட்ட ரீதியற்ற, எழுத்துப் பதியாத திருமணங்கள் மூலம் பிறந்த குழந்தைக்கு பிறப்பைப் பதிவதில் சிக்கல் தோன்றும்.
- ✹ முறை தவறிய பாலுறவின் செயற்பாடுகளால் பிறந்த பிள்ளைகளுக்கு தந்தையின் பெயரை இடுவதில் ஏற்படும் சிக்கல் நிலை
- ✹ இளவயதுக்கர்ப்பம் போன்ற காரணங்களால் பிள்ளையின் பெயர், தாய், தந்தையின் பெயரை இடுவதில் ஏற்படும் தயக்கம்
- ✹ சட்ட பூர்வமற்ற திருமணத்தினால் பிறந்த பிள்ளைகளுக்கு தந்தையின் பெயரை இடுவதில் சம்மதம் கிடைக்காமையும் தந்தை யார்? ஏன்பதை அறிவதில் சிக்கலும்.

ஏனெனில் தந்தையின் பெயரில் இடப்படும் (6 ஆம்) இலக்கக் கூடு நிரப்பப்படாமல் வெறுமையாக விடப்படும் பத்திரங்களை தாய் விரும்புவதில்லை. இதன் காரணமாகவும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் எடுக்கப்படாத நிலைகளும் உண்டு.

எவ்வாறு இருப்பினும் பெற்றோர் விடும் தவறுகளுக்காக பிள்ளைகளைத் தண்டிப்பது எந்தளவு நியாயம்? எதுவும் அறியாது பிஞ்சுக் குழந்தைகள் வளரும் காலத்தில் அவர்களை பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத பிள்ளைகள், தகப்பன் பெயர் தெரியாத பிள்ளைகள், முறை தவறிப் பிறந்த பிள்ளைகள் போன்ற பெயர்களை கட்டுவது அவர்களின் உயரிய நலனுக்கு கேடு விளைவிப்பதாக அமையாதா?


எவ்வாறு இருப்பினும் பிறந்த பிள்ளைகளுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரமே இல்லாது இருப்பதை விட தந்தையின் பெயரை மட்டும் போடாது இருப்பது தான் பிரச்சினை யென்றால் தந்தையின் பெயரை இடாது தாயாரின் பெயருடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை எடுப்பது சிறந்ததாகும்.

இவ்வாறு இருப்பினும் ஒவ்வொருவரும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வைத்திருப்பதற்கு உரித்துடையவர்கள். பெற்றோர், பெரியோர்களே இவற்றை பிள்ளைகளுக்கு வழங்க பின்நிற்காதீர் .

**ச.ம.யூ.பிறிட்ஜற்**
**சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்.**

# இருபாலை வீதியில் அடிக்கடி அனர்த்தம் நிகழ்கின்றது

## நேற்றும் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பினார்



(யாழ்ப்பாணம்)

இருபாலை கற்பகப்பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக நேற்றுக் காலையும் விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் வீதிக்கு காப்பெற்றிடும் பணி இடம்பெற்று வருவதனால் டிப்பர் வாகனம் ஒன்றினால் வீதிக்கு தேவையான கற்கள் ஏற்றிக்கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த டிப்பர் வாகனத்தினால் வீதியின் ஓரமாக கற்கள் பறிக்கப்படும் போது மின்சாரக் கம்பி வாகனத்தினால் இழுத்து அறுக்கப்பட்டுள்ளது.

இதன்போது வீதியால் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது.

அறுந்து வீதியில் விழுந்து கிடந்த மின்சாரக் கம்பியினுள் குறித்த மோட்டார் சைக்கிள் அகப்பட்டதோடு மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவர் தூக்கி வீசப்பட்டார்.

இருந்தும் அவர் சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினார். ஆனாலும் அவரது மோட்டார் சைக்கிளை மின்சாரக் கம்பிகள் சுற்றியதோடு மின்சாரமும் ஊடு கடத்தப்பட்டுக் கொண்டிருந்தமை அப்பகுதியில் கூடி நின்றவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது.

குறித்த விபத்து தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இருபாலையில் குறித்த பகுதியில் அடிக்கடி வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றது.

கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மினிபஸ் ஒன்றும் தனியார் பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதோடு மூவர் பலியாகியிருந்தனர். இதன் பின்பு கடந்த ஞாயிற்றுக்கிழமையும் அந்தப் பகுதியில் மினிபஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியிருந்தது. இதில் நால்வர் படுகாயமடைந்திருந்தனர்.

இவ்வாறு இருபாலை சந்திக்கு அருகாமையில் உள்ள வீதி வளைவில் தொடர்ந்து விபத்துச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(மல்லாவி)

உடுவில், தெல்லிப்பழை, நல்லூர், கோப்பாய் ஆகிய கல்விக் கோட்டங்களில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை தமிழ்ப்பாடம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்குமான கவிதை கற்பித்தல் செயலமர்வு நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு உடுவில், தெல்லிப்பழை ஆகிய கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கு மருதனார் மடத்திலுள்ள வடமாகாண கல்வித் திணைக்கள ஒன்றுகூடல் மண்டபத்திலும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர், கோப்பாய் ஆகிய கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கு யா/செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இதில் மேற்படி கோட்டங்களில் குறிப்பிடப்பட்ட தரங்களுக்கு தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்து கொள்வதோடு நேற்றைய தினம் அறிவிக்கப்பட்ட சண்டிலிப்பாய் கோட்ட ஆசிரியர்கள் கலந்து கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் அறிவித்துள்ளார். (அ-9-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்.
வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்.
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இன்றைய நிலைதான் நாளையும் என்று எவரும் எண்ணக் கூடாது

போர் ஏற்படுத்திய வடுக்களால் தமிழ் மக்கள் நொந்து போயுள்ளனர். முப்பது ஆண்டுகால யுத்தவாழ்வு என்பது தமிழ் மக்களை பல்பரிமாணங்களில் தாக்கியுள்ளது.

அதிலும் வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த போரின்பாதிப்புகள் மௌனமாக இருப்பதுதான் ஒரே வழியென்ற மனநிலையை தோற்றுவித்துள்ளது.

இவ்வாறாக தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பகரமான சூழ்நிலையை எவரும் தமக்கு சாதகமாக்கிக் கொள்ளக் கூடாது.

மற்றவர்களின் துன்பத்தில் என்னுடைய இலாபம் என்பது, எதிர்காலத்தில் இன்னுமொரு பேரிடி காத்திருக்கிறது என்பதற்கான விதைப்பாகும்.

விடுதலைப் போராட்டம் நடந்த காலத்தில் சிங்கள மக்கள் பஸ் வண்டிகளில் பயணம் செய்யக் கூடப் பயந்தனர்.

பஸ் பிரயாணத்தின் போது எவரும் பொதிகளை எடுத்தவரலாகாது என்ற அறிவித்தல்கள் கூட இருந்தன.

புலிகள் தாக்குவது போல கனவு கண்ட இராணுவ சிப்பாய் ஒருவர் கனவு கலையாமல் தன் துப்பாக்கியால் சுட்டதில் அருகிலிருந்த சிப்பாய் பலியாகிப்போன சம்பவங்களும் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது.

இப்போது இருக்கின்ற உலகமயமாதல் சூழமைவு இலங்கை அரசுக்கு சாதகமாக இருக்கலாம்.

நாளை அந்த நிலைமை மாறலாம். இன்று உன்னுடையது, நாளை இன்னொருவருடையது எனப் பகவத் கீதை உபதேசிப்பது இதைத்தான்.

எனவே நீண்ட காலத்தில் இன்னுமொரு யுத்தம் ஏற்படாது என்று எவரும் நினைத்துவிடக் கூடாது.

யுத்தத்தில் வெற்றிபெற்றோம் என்பது, உண்மையான – நிலையான வெற்றியாகாது.

யுத்தத்தில் ஈட்டப்பட்ட வெற்றியென்பது, நிலைக்க வேண்டுமாயின் தமிழ் மக்களின் மனங்களை வெல்லவேண்டும்.

வன்னிப் போரில் இலங்கை அரசு வெற்றி பெற்றிருந்தாலும் எங்களின் உரிமையைத் தந்தது எங்கள் வாழ்வை பலப்படுத்தியது என்று தமிழ் மக்கள் நினைக்க வேண்டும்.

அதுவே உண்மையான வெற்றியாகும். வன்முறைகளை வன்முறையால் வெல்ல முடியாதென்பது கௌதம புத்தபிரானின் போதனை. எனவே, இலங்கை அரசும் படைத்தரப்பும் தமிழ் மக்களின் வாழ்வியல் தொடர்பில் ஆக்க பூர்வமான செயற்பாடுகளை செய்தாக வேண்டும்.

இதைவிடுத்து தமிழ் மக்களுக்குச் சொந்தமான, காணிகளை அபகரிப்பதென்பது, இராணுவம் என்றால் இப்படித்தான் என்ற நினைப்பை இளம் சந்ததிகளிடம் ஏற்படுத்தும்.

ஆகவே சின்னத்தனங்களை விடுத்து படைத்தரப்பு பெருந்தன்மையோடு நடந்துகொள்ள வேண்டும்.

இதனை உயர் இராணுவ அதிகாரிகள் அமுலாக்க வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெறும் சமய நிகழ்வுகள், பொது நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிங்கள–தமிழ் உறவுகள் பேணுவதாக காட்டிக்கொள்ளும் படை அதிகாரிகள் மனதளவிலும் சொல்லளவிலும் அதனை செய்யும் போது உண்மையான–விமர்சிக்க முடியாத ஒற்றுமை ஏற்பட வாய்ப்புண்டு.

இதை விடுத்து நிலத்தை அபகரிப்பதென்பது சீ... இவர்கள் இன்னமும் திருந்தவில்லையா என்று எண்ணத்தோன்றும்.

## திருநெல்வேலி காணி விவகாரம்
# உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர நல்லூர்ப் பிரதேச சபை முடிவு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி காணிவிவகாரம் தொடர்பில் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான திருநெல்வேலி பாற்பண்ணைக்கு முன்பாகவுள்ள காணியை ஆக்கிரமித்த இராணுவத்தினர் அங்கு இரவோடு இரவாக இராணுவ முகாம் ஒன்றினையும் அமைத்துள்ளனர்.

இராணுவத்தினர் அடாத்தாக காணியை அபகரித்தது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் நாளாந்தம் இராணுவத்தினர் தமது செயற்பாடுகளை விஸ்தரிப்பு செய்து வருகின்றனர்.

அண்மையில் குறித்த காணியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவலாளியை அடித்து துரத்திவிட்டு அடாத்தாக காணியை கையகப்படுத்திய இராணுவத்தினர் தற்போது படை முகாம் ஒன்றினையும் அமைத்துள்ளனர்.

நல்லூர் பிரதேச சபையினால் சிறுவர் பூங்க அமைப்பதற்காக குறித்த காணி ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கான நடவடிக்கையினையும் பிரதேச சபை மேற்கொண்டு வந்தது. இருப்பினும் இராணுவத்தினர் அடாத்தாக காணியை கையகப்படுத்தி வைத்துள்ளனர்.

சுமார் 5.5 பரப்புக்காணி சுற்று மதிலுடன் இராணுத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிவிவகாரம் தொடர்பில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

இருப்பினும் குறித்த காணியை விட்டு இராணுவத்தினரை வெளியேற்றுவது தொடர்பில் எந்த முடிபும் எடுக்கப்படவில்லை.

இந் நிலையில் இந்தக் காணிவிவகாரம் தொடர்பில் முடிபெடுக்கும் முகமாக நேற்று பிரதேச சபையின் விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் போதே உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்வது என தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் சபை உறுப்பினர்கள் (ஆளும்–எதிர்க்கட்சி) அனைவரும் ஏகமனதாக இதற்கு உடன்பட்ட தாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஊடாக இந்த வழக்குத்தாக்கல் செய்யப் படவுள்ளதாக தவிசாளர் தெரிவித்தார்.

மேலும் தற்போது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா சென்றுள்ளதால் அவர்கள் நாடு திரும்பியதும் இந்த வழக்கினை தாக்கல் செய்யவுள்ளோம்.

எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# தொலைத் தொடர்பு நிலையத்தில் கைத் தொலைபேசிகள் கொள்ளை
## யாழ்.நல்லூரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூரிலுள்ள தொலைத் தொடர்பு நிலையமொன்றில் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நல்லூர் செட்டித்தெருவில் உள்ள தொலைபேசி நிலையம் ஒன்றிலேயே கணனி உதிரிப்பாகங்கள், கையடக்கத் தொலைபேசிகள் ஆகியன நேற்றுமுன்தினம் இரவு கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொலைத்தொடர்பு நிலையத்தின் உரிமையாளர் நேற்றுக் காலை கடையைத்திறந்தபோது திருட்டுப் போயுள்ளதைக் கண்டு யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக உதவிப்பொலிஸ் பொறுப்பதிகாரி குணசேர தெரிவித்தார்.

இதேவேளை, கடந்தவாரமும் இத் தொலைத் தொடர்பு நிலையத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் யாழ்.பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-4)

## சத்திய தரிசனம்



புலன்களைக் கட்டுப்படுத்துதல் ஒரு புனிதமான ஆன்மீகப் பயிற்சியாகும். புலன்களைக் கட்டுப்படுத்து. உணவு உண்பதைக கட்டுப்படுத்து. பசி அடங்கும் அளவிற்கு உண். வயிற்றை நான்கு பாகங்களாக வகுத்துக்கொள். ஒரு பகுதியை நீரால் நிரப்பி. ஒரு பகுதியைக் காற்றால் நிரப்பி. ஒரு பகுதியை உணவால் நிரப்பி. ஒரு பகுதியை வெறுமையாக வைத்திரு. இப்போது மனிதன் அவ்வாறல்ல.

## உலகின் அதிக வயது பெண்மணி மரணம்


(கொழும்பு)

உலகின் பெருமையைப் பெற்று அந்திஷா கபிஷாவா தனது 132 ஆவது வயதில் காலமானார்.

இறக்கும்போது அவருக்கு 132 வயதாகும். முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்த நாடான யோஜியாவின் அந்திஷா கபிஷாவான இவர் 1880 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதி பிறந்தார்.

1965 ஆம் ஆண்டு வரை இவர் தேயிலை பறிக்கும் வேலையை செய்து வந்துள்ள இவர் 60 வயதாக இருக்கும் போது குழந்தை ஒன்றை பிரசவித்தார்.

இப்போது அவருக்கு (வயது 132) ஆகும். முன்னதாக உலகின் அதி கூடிய பெண் மணியாக கருதப்பட்ட பிரான்சைச் சேர்ந்த யெனி கிளவட் தனது 122 ஆவது வயதில் 1997 ஆம் ஆண்டு காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்
### பெரியவர்களைக் கேலி செய்யாதீர்!

இன்றைய இளைஞர்களில் சிலர் முதியோரைக் கேலி செய்வதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு செய்பவர்கள் பாவத்தைச் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். பெரியவர்களிடத்தில் இறைவன் குடிகொண்டிருக்கிறார்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் சிவனைப் பற்றிப் பாடும்போது பழங்குடில் தோறும் ஏறிய பரனே! என்று கூறுகிறார். அவர் பழங்குடில் என்று குறிப்பிடுவது பெரியவர்களைத்தான்.

ஆணவம், இவ்வுலக வாழ்க்கை நிலையானது என்ற மாயை ஆகியவற்றை உதறிவிட்டு வாழ்க்கையின் தத்துவத்தை புரிய ஆரம்பிக்கும் பக்குவம் 60 வயதுக்கு மேல்தான் மனிதனுக்கு வருகிறது. தாங்கள் அதுவரை பார்த்த வேலை போனபிறகே அவர்களுக்கு தங்கள் மதிப்புத் தெரிகிறது.

அதன்பிறகே தங்களுக்குத் தரப்பட்ட மதிப்பு தங்களுக்கானதல்ல. அதுவரைசம்பாதித்த பணத்திற்குரியது என்பதைப் புரிந்துகொள்கிறார்கள். மனம் வருந்தி இறைவனை நினைக்கிறார்கள்.

இறைவனும் அந்த முதியவர்களை தனது குழந்தைகளாகக் கருதி அவர்களின் மனதில் வந்து அமர்ந்து கொள்கிறான். இறை சிந்தனையுடன் இறைவனாகவே மாற அவர்கள் துடிக்கிறார்கள். எனவே பெரியவர்ளைக் கேலி செய்வது, இறைவனையே கேலி செய்வதற்குச் சமம். அதற்குரிய தண்டனை கிடைப்பது நிஜம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹொக்கியில் யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் சம்பியன்



யாழ்.மாவட்ட பாடசாலை ஹொக்கிச் சங்கம் நடத்திய 14 வயதுப்பிரிவு ஆண், பெண், இருபாலாருக்குமான ஹொக்கிச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலாவதாக இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட் டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி சம்பியனாகியது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

ஆட்டநேர முடிவில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதற்கான 5 சமநிலை தவிர்ப்பு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

# சதுரங்கப்போட்டி

இலங்கைச் சதுரங்கச் சம்மேளனமும் யாழ்.மாவட்டச் சதுரங்கச் சம்மேளனமும் இணைந்து நடத்திய கழகங்களுக்கிடையிலான சதுரங்கத் தெரிவுப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விபரங்கள் வருமாறு,

திறந்தபோட்டி

முதலாமிடம்- ஜொலிஸ்டார் நைட்ஸ் அணி
இரண்டாமிடம்-தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி
மூன்றாமிடம்-உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி

பெண்களுக்கான திறந்தபோட்டி

முதலாமிடம்-அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
இரண்டாமிடம்-தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
மூன்றாமிடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

# யாழ்ப்பாண சென். பற்றிக்ஸ் வெற்றி



யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

இலங்கைப் பாடசாலைக் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப் பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிச்சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த வெள்ளிக்கிழமை கிழக்குப் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற ஒருநாள் போட்டி ஒன்றில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரி அணியும் மோதின.நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று ஆடிய மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரி அணி 22 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 36 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

அதிகபட்சமாக அஜித்குமார் 5 ஓட்டங்களையும் சாத்விகன் 4 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அகீபன் 8 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்டமற்ற ஓவர் உட்பட 8 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் கொலின்ஸ், கிருசாந்தன் தலா 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

37 ஓட்டத்தினைப் பெற்றால் வெற்றி எனக் களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 5.2 ஓவர்களில் 3 விக்கெட்டினை இழந்து தனது வெற்றியிலக்கினை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் கொலின்ஸ் ஆட்டமிழக்காது 8 ஓட்டங்களையும் நிலக்ஷன் 8 ஓட்டங்களையும் டானியல் 5 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நிவேதன் 13 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# உதைபந்தாட்ட முடிவுகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அணிகளின் விபரம் வருமாறு,

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நியூட்டன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நியூட்டன் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இன்னொரு ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இரு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை தவிர்ப்பு உதை வாய்ப்பு வழங்கப்பட்டது. எனினும் அதன் போது போதிய வெளிச்சம் இன்மை நிலவியதால் குறித்த போட்டி கைவிடப்பட்டு இன்னொரு தினத்தில் மீள்போட்டி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

# ஸ்கைலப் வி.க.அணி வெற்றி

இலங்கை உதைபந்தாட்டம் சம்மேளனமும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக முதற்கட்ட போட்டிகளை பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடத்தி வருகின்றன.

இந்தவகையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 21 வயது பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் துணுக்காய், பாண்டியன்குளம் இளங்கதிர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறுகிறது.

இந்த இறுதியாட்டத்தில் ஸ்கைலப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஸ்கைலப் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கணக்கில் இளங்கதிர் அணியை வீழ்த்திச் சம்பியனாகிறது.

# முல்லைத்தீவில் கரப்பந்தாட்ட பயிற்சி முகாம்





(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவிலே கரப்பந்தாட்டத்துறையை வளர்க்கும் முகமாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வீர வீராங்கனைகளுக்கான கரப்பந்தாட்ட பயிற்சி முகாம் கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பாண்டியன் குளம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இப்பயிற்சி முகாமிற்கு ஐம்பதிற்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சி முகாம் மூலம் வீர வீராங்கனைகள் கரப்பந்தாட்ட நுணுக்கங்களை அறிந்து கொண்டனர். இப்பயிற்சி முகாமில் பயிற்சிகளை மாந்தை கிழக்கு பிரதேச [illegible] தயாளபாலன் மற்றும் சுதர்சன் ஆகியோர் வழங்கினர். இப்பயிற்சிமுகாமில் கலந்து கொண்ட வீர வீராங்கனைகளுக்கு சீருடைகளும் [illegible]

(23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சியை காப்பாற்றியது இலங்கை கிரிக்கெட் சபை

International Cricket Council

நடைபெற்று முடிந்த உலக இருபது -20 தொடரின் போது இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியில் இலங்கை அணியின் வழமையான தலைவர் மஹேல ஜெயவர்த்தனவிற்குப் பதிலாக குமார் சங்கக்கார அணித்தலைவராக செயற்பட்டிருந்த நிலையில், அரையிறுதிப் போட்டியில் சர்வதேச கிரிக்கெட் சபையின் கோரிக்கையின் பேரிலேயே மஹேல ஜெயவர்த்தன அணித்தலைவராக கடமையாற்றியதாக தெரியவருகிறது.

கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் சபை இலங்கைக் கிரிக்கெட் அணியின் முகாமைத்துவத்திடம் கோரிக்கை விடுத்ததன் காரணமாகவே அரையிறுதிப் போட்டியில் மஹேல ஜெயவர்த்தன அணித்தலைவராகச் செயற்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரையிறுதிப் போட்டியிலும் குமார் சங்கக்காரவே அணித்தலைவராகச் செயற்பட முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும், இலங்கை அணி இங்கிலாந்திற்கெதிரான போட்டியில் குமார் சங்கக்காரவை அணித்தலைவராகச் செயற்படுத்தியதால் சர்வதேச கிரிக்கெட் சபைக்கு ஏற்பட்ட அவமானத்தை கருத்தில் கொண்டு அரையிறுதிப் போட்டியில் மஹேல ஜெயவர்த்தனவை அணித்தலைவராகச் செயற்படுமாறு சர்வதேச கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

இலங்கை அணி மைதானத்தில் குறித்த ஓவர்களைக் குறித்த நேரத்திற்குள் வீசுவதற்கு முயன்றாலே போதுமானது எனவும், முன்னைய போட்டிகள் போன்று அதிக கடுமையான நடைமுறை பின்பற்றப்பட்டு அணித்தலைவருக்கும், வீரர்களுக்கும் அபராதம் விதிக்கப்படாது எனவும் சர்வதேச கிரிக்கெட் சபை உறுதியளித்திருந்ததாகத் தெரிகிறது.


அரையிறுதிப் போட்டிக்கு முன்னதாக இடம்பெற்ற இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான சுப்பர் 8 போட்டியில் இலங்கை அணியின் வழக்கமான தலைவரான மஹேல ஜெயவர்த்தனவிற்கு பதிலாக குமார் சங்கக்கார உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான சுப்பர் 8 போட்டியில் இலங்கை அணி குறித்த நேரத்திற்குள் ஓவர்களை வீசி முடிக்கவில்லை என்பதால் மஹேல ஜெயவர்த்தனவிற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தநிலையில், இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியிலும் இலங்கை குறித்த நேரத்திற்குள் ஓவர்களை வீசி முடிக்காது விடின் போட்டித் தடை விதிக்கப்படும் என்பதாலேயே குமார் சங்கக்கார அணித்தலைவராகச் செயற்பட்டிருந்தார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிகளின் படி அணியொன்று ஒரே தலைவரின் கீழ் 12 மாதங்களுக்கு இரண்டு தடவைகள் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் பந்துவீசியிருக்காவிடில் அடுத்த போட்டியில் அணித்தலைவர் பங்குபற்றுவதற்குத் தடை விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

Sri Lanka Cricket

# சர்வதேச கிரிக்கெட் வாரியத்தின் துணைத்தலைவராக முஸ்தபா



சர்வதேச கிரிக்கெட் வாரிய (ஐ.சி.சி.) தலைவர், துணைத்தலைவர் பதவிகளுக்கு சுழற்சி முறையில் தெரிவு செய்யப்படும்.

2012-2014 ஆம் ஆண்டுக்குரிய துணைத் தலைவர் பதவிக்கு பங்களாதேஷ், பாகிஸ்தான் சார்பில் யாராவது ஒருவர் தெரிவு செய்யப்படும் நிலையிருந்தது.


இதையடுத்து பங்களாதேஷ் கிரிக்கெட் வாரியத்தின் (பி.சி.பி) தலைவர் முஸ்தபா கமால் பெயர் இதற்கு பரிந்துரை செய்யப்பட்டது.

இதற்கு சர்வதேச கிரிக்கெட் வாரியம் ஒப்புதல் வழங்கியது. இதனால் வரும் 2014 வரை இப்பதவியில் முஸ்தபா கமால் இருப்பார்.

இதையடுத்து 2014 தேர்தலில் சர்வதேச கிரிக்கெட் வாரிய தலைவராக தெரிவு செய்யப்படுவார்.

## ஜப்பான் ஓபன் டெனிஸ்

# அடுத்த சுற்றுக்கு லாரா முன்னேற்றம்



ஜப்பான் ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில் விளையாட இங்கிலாந்து வீராங்கனை லாரா ராப்ஸன் தகுதி பெற்றுள்ளார்.

ஜப்பான் ஓபன் டென்னிஸ் போட்டி ஜப்பானில் நடைபெற்று வருகிறது. இதன் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இங்கிலாந்தின் முதல் நிலை வீராங்கனையும் உலக தர வரிசையில் எட்டாவது இடத்திலும் இருக்கும் லாரா ராப்ஸன், கிறிஸ் நாட்டின் எலினி டேனிலிடோவுடன் மோதினார்.

இதில் ஆரம்ப முதலே அதிரடியாக விளையாடிய ராப்ஸன் 6:4, 6:2 என்ற நேர்செட்டில்களில் எளிதாக வென்றார். இரண்டாவது சுற்றில் அவர் சீனாவின் யிமியாவோவுடன் மோதுகிறார்.

மற்ற முதற்சுற்றுப் போட்டிகளில் சீனாவின் செங் ஜீ, ஆறாம் நிலை வீராங்கனையான அனபெல் மெடினா, தென்னாபிரிக்காவின் சான்லி ஸ்கிப்பர்ஸ் ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினர்.

# தலைமையினால் மாற்றங்கள் ஏற்படாது : மெஸ்ஸி





2014ஆம் ஆண்டு நடைபெற உள்ள உலகக் கிண்ண கால்பந்து தொடரில் இடம் பெறும் அணிகளுக்கான தகுதிப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

மெண்டோசாவில் இன்று நடைபெற இருக்கும் தகுதி ஆட்டத்தில் ஆர்ஜெண்டினா அணி உருகுவே அணியுடன் மோதுகிறது. ஆர்ஜெண்டினா அணி தனது அடுத்த ஆட்டத்தில் சிலியை எதிர்கொள்கிறது.

தகுதிச்சுற்று ஆட்டங்கள் பற்றி ஆர்ஜெண்டினா அணியின் அணித்தலைவரான நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி கூறுகையில், ஒரு அணியாக நாங்கள் வலிமையாக உள்ளோம் ஆனால் நாங்கள் மேலும் முன்னேற்றம் காணவேண்டும்.

இந்த உலகக் கிண்ணத் தகுதிச்சுற்று ஆட்டங்கள் மிகவும் கடுமையாக இருக்கும். எனவே நாங்கள் மிகவும் உழைக்க வேண்டும் என்றார்.

கோல் அடிக்கும் திறமைவாய்ந்த வீரர்கள் எங்கள் அணியில் இருப்பது தங்களுக்கு சாதகமானது. முடிந்த அளவுக்கு எனது பங்களிப்பை அளிப்பேன் என்றும் அணித்தலைவர் பதவி என்னை மாற்றாது எனவும் கூறியுள்ளார்.

பெரு அணிக்கெதிரான தகுதிச்சுற்று ஆட்டத்தை 1:1 என்ற கணக்கில் சமன் செய்த போதும் ஆர்ஜெண்டினா அணி 7 ஆட்டங்களில் 14 புள்ளிகளைப் பெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

ஆர்ஜெண்டினாவுடன் மோத இருக்கும் உருகுவே அணியோ 12 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்திலுள்ளது. பார்சிலோனா அணியில் ஆடிவரும் மெஸ்சியின் வருகையால் ஆர்ஜெண்டினா அணி தற்போது மேலும் வலுவடைந்துள்ளது.

மேலும் செர்ஜியோ, ஹிகுவெய்ன், லாலெஸ்சி உள்ளிட்ட வீரர்களும் இருப்பதால் ஆர்ஜெண்டினா அணி மிகவும் வலிமையான அணியாகக் கருதப்படுகிறது.

# இராணுவ தினத்தை புறக்கணித்தார் தோனி

கௌரவ லெப்டினன்ட் கேர்ணல் அந்தஸ்து பெற்ற தோனி, இராணுவ தினத்தில் பங்கேற்காமல் புறக்கணித்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி இரண்டு உலகக் கிண்ணத்தை வென்று தந்ததை கௌரவப்படுத்தும் வகையில் இவருக்கு இந்திய இராணுவத்தின் சார்பில் கௌரவ லெப்டினன்ட் கேர்ணல் அந்தஸ்து வழங்கப்பட்டது.

இதேபோல கிரிக்கெட்டில் சச்சின் படைத்த சாதனைகளுக்காக விமானப் படை சார்பில் செப்டம்பர் 2010ல் கௌரவ குறுப் கப்டன் பதவி தரப்பட்டது.

தவிர இவர்கள் இருவருக்கும் அதிநவீன போர் விமானம் சுகோய்-30ல் பறக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அடுத்தடுத்து போட்டிகள் இருந்ததனால் இந்த வாய்ப்பை இன்னும் இவர்கள் ஏற்க வில்லை.

இவர்களுக்குப் பின்வந்த பட்மின்டன் வீராங்கனை சாய்னா நெஹ்வால், போர் விமானத்தில் பறந்து அசத்த சச்சின், தோனி மீது அதிருப்தி ஏற்பட்டதாக தெரிகிறது.

இதனிடையே இராணுவ தினத்தை முன்னிட்டு நடந்த அணிவகுப்பில் தோனி பங்கேற்கவில்லை.

இந் நிகழ்ச்சியில் பங்கேற்ற கபில் தேவ் கூறுகையில், கிரிக்கெட் மூலம் சச்சின், தோனி நாட்டுக்கு சேவை செய்து வருகின்றனர் என்றும் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பின்பு தங்களது இராணுவப் பணியை கண்டிப்பாக செய்வர் என்று நம்புகிறேன் எனவும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னேஸ்வரம் சிவன்...

பிரதேச செயலகத்திலே கடந்த மே மாதமே தாங்கள் விண்ணப்பித்து விட்டாலும் இன்று வரை அனுமதி வழங்கப்படவில்லை.

ராஜகோபுரம் அமைப்பதற்கான திட்டமிடலில் தாம் ஈடுபட்டபோது, அந்த இடத்தில் சந்தன வட்டக்கல் ஒன்று கிடைத்துள்ளது. இது பௌத்த மத சாயல் கொண்டுள்ளது என்று தொல்லியல் துறையினர் கூறுகின்றனர்.

கோயில் வளாகத்தில் இருக்கின்ற அரச மரம் பௌத்தர்களுக்கு புனிதமான மரம் என்றும் ஆதலால் ராஜகோபுரத்துக்கான அஸ்திபாரத்தை அவ்விடத்தில் அமைக்க முடியாது என அப்பகுதியைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் திட்டவட்டமாகக் கூறுகின்றனர்.

ராஜகோபுரத்துக்கான அஸ்திபாரப் பணிகள் நடந்த நிலையில், இது பௌத்த தொல்லியல் பகுதி என்று பிக்குமார் கூறிவருவது எமக்கு கலக்கத்தை தருகின்றது.

ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மேதானந்த தேரர் இந்தக் கோயில் பகுதிக்கு வந்து பார்த்துவிட்டு, இது பௌத்த புனித பிரதேசம் என்று ஊடகங்களுக்கு பேட்டியளித்து வருவது இங்குள்ள இந்துக்களுக்கு வருத்தம் தருகின்றது.

நல்ல விநாயகர் ஆலயம் அமைந்திருந்த இடம் பிக்குமார் தங்கிய பிரதேசம் என்றும், செட்டிமார் மடம் பௌத்த ஆறாமைகள் என்றும், திருக்குளம் அமைந்திருக்கின்ற இடம் பௌத்த சைத்தியம் அமைந்திருந்த இடம் என்றும் அவர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருவதாக பத்மநாப குருக்கள் கவலையுடன் தெரிவித்தார்.

பிரதேச சபையின் அனுமதி பெற்றுத்தான் கட்டிடம் கட்ட வேண்டும் என்ற நிலை பௌத்த ஆலயங்களுக்கு இல்லை என்றும் ஆனால் இந்து ஆலயங்களுக்கு அத்தகையதொரு இறுக்கமான நிலை காணப்படுவதாகவும் அவர் நொந்து கொண்டார்.

ராஜகோபுரம் பதினொரு தளங்களைக் கொண்டு அமையும் என்று தாங்கள் குறிப்பிட்டிருந்த நிலையில், மூன்று மாடிக்கட்டிடங்கள் வரைதான் பிரதேசசபை அனுமதியளிக்க முடியும். அதனிலும் உயரமான கட்டிடங்களுக்கு மாகாண தலைமைப் பொறியியலாளரின் அனுமதி வேண்டும் என தமக்குத் தெரிவிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

ராஜகோபுரம் என்பது மக்கள் வாழப் போகும் ஒரு கட்டிடம் அல்ல. ஆகவே இந்த விதி கோபுரத்துக்குப் பொருந்தாது என பத்பநாப குருக்கள் சுட்டிக் காட்டினார். (ந-11)

## இரும்பின்...

இன்னொரு பெண் இது தொடர்பில் உடனடியாக முல்லைத்தீவு பொலிஸ் மற்றும் படையினருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

அதன் பின்னர் அங்கு வந்த படையினர் குண்டை பாதுகாப்பாக எடுத்துச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் அப்பகுதி மக்களிடம் விசாரணை செய்து வருகின்றனர்.

யுத்தம் கடுமையாக இடம்பெற்ற இவ்விடங்களில் வசிக்கும் மக்களிடம் வெடிபொருட்கள் பற்றிய போதிய விழிப்புணர்வு இன்மையை இச்சம்பவம் சுட்டி நிற்பதாக சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-267)

## கொடி பிடித்து...

நடு வீதியில் இறங்கி பதாகைகளைப் பிடித்துக் கொண்டும், சவப் பெட்டியை தூக்கிச் சென்று எரிக்கும், உருவப் பொம்மை எரிக்கும் சட்டத்தரணிகள் ஞாயிறு அறநெறி வகுப்புக்குச் சென்று சமயம் கற்றவர்கள் என அவர் சாடியுள்ளார்.

நாட்டின் கற்றோர், புத்திஜீவிகள் இவ்வாறு நடந்து கொண்டால் நாட்டு எதிர்காலம் கடவுள் கைகளில்தான் என்றும் அமைச்சர் மேர்வின் சில்வா இதன்போது ஆதங்கப்பட்டுள்ளார்.

இவர்களால் நாட்டுக்கு பிழையான முன்னுதாரணங்கள் காட்டப்படக்கூடாதெனவும் அவர் குறிப்பிட்டார். (ந-11)

## வாக்கெடுப்பின்றி...

மன்றில் வாக்கெடுப்பிற்காகச் சமர்ப்பிக்கப் பட்டது. எனினும், சட்டமூலம் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதனைத் தொடர்ந்து விருப்பத் தெரிவு முறைமை முற்று முழுதாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொகுதிவாரி மற்றும் விகிதாசார அடிப்படையில் நடத்தப்படும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான 70 வீதமான உறுப்பினர்கள் விகிதாசார அடிப்படையிலும், 30 வீதமான உறுப்பினர்கள் தொகுதிவாரி அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

விருப்பு வாக்கு தேர்தல் முறைமையில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த புதிய முறைமை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிய சட்டம் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை பலவீனப்படுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-11)

## மஞ்சுள மீதான...

நடவடிக்கை எடுக்கப்பட்டதாக காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திவிநெகும சட்டமூலத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து தலைமை நீதிபதியையும், நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக இருக்கின்ற இரண்டு மூத்த நீதிபதிகளையும் அரச ஊடகங்கள் மோசமாக சித்திரித்துவந்த விடயமும் இந்த அறிக்கையில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு, சுயாதீனமான ஒரு நீதி அமைப்புத் தேவை என்று கூறியுள்ள ஜாப்ரி, அரச ஊடகம் மூலமாக நீதிபதிகளுக்கு மிரட்டல் விடுப்பது நீதித்துறையின் சுதந்திரத்தையும் பக்க சார்பற்ற தன்மையையும் பாதிக்கும் என்று கூறியுள்ளார். (ந-11)

## ஊவா பல்கலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு

ஊவா பல்கலைக்கழகத்தின் மாணவர் அனுமதிக்காக இம்முறையும் தகுதிகாண் பரீட்சை (Aptitude Test) நடத்தப்படவுள்ளது என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை www.uwu.ac.lk என்ற ஊவா பல்கலைக் கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பார்வையிட முடியும். (ந-36)

## மகிந்தவின் ஆலோச...

சோமதிலக திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடற்படைத்தளபதி பதவியில் இருந்து ஓய்வு பெறுவதற்கு சில நாட்கள் முன்னர் அவர் 4 நட்சத்திர அட்மிரலாக ஜனாதிபதியால் பதவி உயர்த்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## சட்ட விரோத...

திட்டமிட்டுள்ளமை பொலிஸாருக்குத் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்தே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார், சிலாபத்துறை பிரதேசத்திற்குச் சென்று அங்கிருந்து படகு மூலம் செல்ல திட்டமிட்டிருந்ததாகவும், இவர்கள் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் சிலாபம் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இரு பெண்களும் கைக்குழந்தை ஒன்றும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ந-11)

# மரண அறிவித்தல்

## அமரர் அன்னலிங்கம் அமுதராஜ்

### (அபிநயா மினிபஸ் உரிமையாளர்)




அல்வாய் வடமத்தி குமுதெனியாவைப் பிறப்பிடமாகவும் ஆதியாமலை உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் அமுதராஜ் (அபிநயா மினிபஸ் உரிமையாளர் 61-6046,751) 05.10.2012 அன்று அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் அன்னலிங்கம் (அப்புதுரை), அருந்தவச்செல்வி (சிவா) அவர்களின் அன்பு மகனும், கோசலாவின் அன்புக் கணவரும் அபிநயா, அபிசன், அபிநேந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

அமிர்தா, அகிலன், அஜந்தா, அசோக், அஜந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும்,

செல்வராசா, மாலா ஆகியோரின் அன்பு மருமகனும்,

கோபிநாத், கோபிராஜ், சுதர்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

சிறீகாந்தன், தனுசா, செல்வராசா, விஜயகௌரி, ரஜிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

தர்சினி, சத்தியபாமா ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும்,

ராயுதன், ராகவி, சஜந்தா, கோபிசாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும்,

அஸ்விதா, அனோஜிதா, அக்சயா, அபிசாந் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.10.2012 இன்று வியாழக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆதியாமலை
உடுப்பிட்டி

தகவல்
குடும்பத்தினர்

(சி-1273)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org